[7] Singh, Mayank, and S. Indu. "Denoising of palm leaf manuscripts using Gaussian filter and conservative smoothing." AIP Conference Proceedings. Vol. 2521. No. 1. AIP Publishing, 2023.

[8] Sutramiani, Ni Putu, Nanik Suciati, and Daniel Siahaan. "MAT-AGCA: Multi Augmentation Technique on small dataset for Balinese character recognition using Convolutional Neural Network." ICT Express 7.4 (2021): 521-529.

[9] Islam, Mohammad Anwarul, and Ionut E. Iacob. "Manuscripts Character Recognition Using Machine Learning and Deep Learning." Modeling 4.2 (2023): 168-188.

[10] Balakrishnan Jayakumari, Bipin Nair, and Amel Thomas Kavana. "Classification of heterogeneous Malayalam documents based on structural features using deep learning models." International Journal of Electrical & Computer Engineering (2088-8708) 13.1 (2023).

TAMIL CORPUS DEVELOPMENT AND LINGUISTIC RESOURCES

செவ்வியல் தமிழ் சொற்பிரிப்புக் கருவி

முனைவர் இரா.அகிலன்

ஆய்வுச்சுருக்கம்

இயற்கை மொழி ஆய்வு என்பது இயற்கை மொழி அமைப்பைக் கணினிக்கு ஏற்ற வகையில் இலக்கணமாகக் கொடுப்பது. கணினிக்கு இயற்கை மொழி ஆய்வை மேற்கொள்ளும் அறிவுத்திறனைக் கொடுப்பதற்குப் பல மொழிப் பயன்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். இதில் மிக அடிப்படையானது தரவக உருவாக்கம். கணினி புரிந்துகொள்ளும் வகையிலான தரவகம் உருவாக்கப்பட வேண்டும். மேலும் உருவாக்கப்பட்ட தரவகத்தை அடிப்படையாகக் கொண்டு மொழிப் பயன்பாட்டு ஆய்வுகளுக்கான மொழிக் கருவிகள் உருவாக்கப்பட வேண்டும். செவ்வியல் தமிழ் சொற்பிரிப்புக் கருவி என்பது உள்ளீடு செய்யப்பெற்ற செவ்வியல் பாடல்களை ஏற்கெனவே உருவாக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மூலப்பாடத்திலிருந்து சந்தி பிரித்த பாடம், சொற்கள் பிரித்த பாடம் எனச் சங்க இலக்கியங்களைக் கணினி மொழியியல் ஆய்வுகளுக்குத் தேவையான தரவுகளாக உருவாக்கி அளிக்கக்கூடிய மென்பொருள். செவ்வியல் தமிழ் சொற்பிரிப்புக் கருவி உருவாக்கம், தரவக உருவாக்கத்தில் இக்கருவியின் பங்கு, சொற்பிரிப்புக் கருவி பயன்பாடுகள், கருவி உருவாக்கத்தில் ஏற்படும் சிக்கல்கள் மற்றும் தீர்வுகள் பற்றி விரிவாக ஆராய்வதே இதன் நோக்கமாக அமைகிறது.

முனைவர் இரா.அகிலன்
நிரலாளர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை.

1. அறிமுகம்

ஒரு குறிப்பிட்ட ஒழுங்குமுறையுடன் அதிக அளவில் தேர்வு செய்யப்பட்டுச் சேமிக்கப்பட்ட இயற்கையான நடைகளை உடைய உரைகள் மற்றும் பல்வேறு பனுவல்களின் தொகுப்பு பெருந்தரவு எனப்படும். இஃது ஒரு குறிப்பிட்ட மொழியின் சொற்கள் அல்லது துறைச் சொற்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஒரு மொழியின் பல்வேறு பரிணாமங்களை எதிரொலிப்பதாகவும் பலதரப்பட்ட புலங்களுக்கு முதன்மை அளிப்பதாகவும் அறிவியல் முறைப்படியும் இருக்க வேண்டும். தரவகம் என்பது பல்வேறு வகைப்படும். ஒரு மொழியின் வரலாற்று வளர்ச்சியைக் காண்பதற்கான தரவகம் வரலாற்றுமுறைத் தரவகம் (Historical Corpus) என்றும், ஒரு குறிப்பிட்ட மொழியின் இன்றைய அமைப்பை அல்லது இலக்கணத்தைப் பெறுவதற்கான தரவகம் ஒத்திசைவுத் தரவகம் (Synchronic Corpus) என்றும், மொழி கற்பித்தல், கற்றலுக்கான தரவகம் (Corpus for Language Learning/Teaching), என்றும் இயந்திர மொழிபெயர்ப்புகளுக்குப் பயன்படும் இரண்டு மொழிகள் அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளின் இணைகளை உள்ளடக்கிய இணைத் தரவகம் (Parallel Corpus) என்றும் பல வகைகளில் பகுக்கப்படுகின்றன. இவ்வாறு பல்வேறு புலங்களுக்குப் பயன்படும் வகையில் தரவகங்களை உருவாக்கப் பல்வேறு வகையான மொழியியல் ஆய்வுக் கருவிகள் பயன்படுகின்றன. இதில் செவ்வியல் தமிழ் சொற்பிரிப்புக் கருவி மூலப்பாடத்திலிருந்து சந்தி பிரித்த பாடம் மற்றும் சந்தி பிரித்த பாடத்திலிருந்து சொற்கள் பிரித்த பாடம் எனச் சங்க இலக்கியங்களைக் கணினி மொழியியல் ஆய்வுகளுக்குத் தேவையான தரவுகளாக உருவாக்கி அளிக்கிறது. இதில் பெறப்படும் தரவுகள் இயற்கை மொழி ஆய்வில் செவ்வியல் நூல்களின் பல்வேறு பரிமாணங்களையும் ஆய்வதற்கு அடிப்படை ஆதாரமாக அமைகிறது.

2. செவ்வியல் தமிழ்த் தரவகம்

தமிழ் மொழிக்கான தரவகம் சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், தற்காலத் தமிழ் என மூன்று வகையான தரவகமாக உருவாக்கப்பட வேண்டும். தமிழில் உள்ள நாற்பத்தொரு செவ்வியல் நூல்கள் கி.மு 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 6 ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தைச் சேர்ந்தது. பின்னர் கி.பி 7

ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 9 ஆம் நூற்றாண்டு வரை இயற்றப்பட்ட இலக்கியங்கள் பக்தி இலக்கிய வகையைச் சார்ந்தது. கி.பி 10 ஆம் நூற்றாண்டு முதல் தற்போது வரையுள்ள மொழி தற்காலத் தமிழாகப் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

இந்த மூன்று வகையான காலகட்டத்தில் தமிழ் மொழியின் சொற்கள், பயன்பாடு பல்வேறு வகைகளில் மாறுபட்டு உள்ளது. எனவே தமிழ் மொழிக்கான தரவகம் உருவாக்கும்போது இவற்றைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட வேண்டும். செவ்வியல் தமிழ் நூல்கள் 41 (தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை, இறையனார் களவியல், முத்தொள்ளாயிரம்) நூற்பாக்கள் வடிவிலும், பாடல் வடிவிலும் இடம்பெற்றுள்ளன. செவ்வியல் தமிழ் நூல்களுக்கு எனப் பல்வேறு தரவக உருவாக்க முயற்சிகள் நடைபெற்று வந்தாலும் சங்க இலக்கியங்களை மூலப்பாடம், சந்தி பிரித்த பாடம், சொற்கள் பிரித்த பாடம் என வகைப்படுத்திக் கணினி புரிந்துகொள்ளும் வகையிலும் இயற்கை மொழி ஆய்விற்கு உட்படுத்தும் வகையிலும் தரவகம் உருவாக்கப்பட வேண்டும். சென்னையில் உள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் செவ்வியல் நூல்களுக்கான தரவகங்களை இந்த மூன்று நிலையில் உருவாக்கி உள்ளது.

படம் 1: செவ்வியல் தமிழ்த் தரவகம்

இந்தத் தரவு செவ்வியல் ஆய்வின் அனைத்துக் கூறுகளையும் இயற்கை மொழி ஆய்வில் உட்படுத்தக்கூடிய அடிப்படைத் தரவாக அமையும்.

3. இயற்கை மொழி ஆய்வுக் கருவிகள்

இயற்கை மொழி ஆய்வில் இந்திய மொழிகளுக்கான பயன்பாடு தன்னிறைவை அடைய முழுமையான தரவகம், குறியீட்டுத் தரவகம் மற்றும் மொழியியல் ஆய்வுக் கருவிகள் உருவாக்கப்பட வேண்டும். இவை உரைத் தரவகம், குறியீட்டுத் தரவகம், பேச்சுத் தரவகம், உரை சுருக்கி, சொல் வங்கி, தேடுபொறி, இயந்திர மொழிபெயர்ப்பு, மின் அகராதிகள், உருபனியல் பகுப்பான், சந்தி திருத்தி, சொல் திருத்தி, இலக்கணத் திருத்தி போன்ற கருவிகள் அடிப்படையானவை. மத்திய அரசின் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் இதற்கென்ற ஒரு தனித் திட்டத்தை, இந்திய மொழிகளில் தொழில்நுட்ப வளர்ச்சி (Technology Development of Indian Language – TDIL) என்ற திட்டத்தை உருவாக்கிச் செயல்பட்டு வருகிறது. தமிழகத்திலும் மாநில அரசானது தமிழ் மொழியின் தொழில்நுட்ப வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மேலும், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை, ஹைதராபாத் பல்கலைக்கழகம் தெலங்கானா, அண்ணா பல்கலைக்கழகம் கணிப்பொறியியல் துறை, சென்னை குரோம்பேட்டை AU–KBC மையம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சிதம்பரம், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம், கோவை பாரதியார் பல்கலைக்கழகம், இந்தியத் தொழில்நுட்பக் கழகம், அமிர்தா பல்கலைக்கழகம் கோயம்புத்தூர், இந்திய அறிவியல் கழகம், பெங்களூரு, மைக்ரோ சாப்ட்வேர், பெங்களூரு முதலான நிறுவனங்கள் தமிழ் மொழிக்கான தொழில்நுட்பக் கருவிகள் உருவாக்கத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன. மத்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் கீழ் இயங்கிவரும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் நாற்பத்தொரு செவ்வியல் நூல்களுக்கான தரவகம் மற்றும் செவ்வியல் நூல்களுக்கான மொழி ஆய்வுக்கருவிகள் உருவாக்கத்தில் ஈடுபட்டு வருகிறது.

4. செவ்வியல் சொற்பிரிப்புக் கருவி

தமிழ் மொழி ஆய்வுக்கு உருவாக்கப்படும் மொழி ஆய்வுக் கருவிகள் சங்க இலக்கியத் தரவுகளை முழுமையாகப் பயன்படுத்தி ஆய்வுகள் மேற்கொள்ள முடியாது. செவ்வியல் தமிழ் நூல்கள் நூற்பாக்கள் வடிவிலும், பாடல் வடிவிலும் அமைந்துள்ளதால், தற்காலத் தமிழுக்கென உருவாக்கப்படும் கருவிகளைச் செவ்வியல் தரவக ஆய்வுகளுக்கு உட்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஆனால் செவ்வியல் தரவுகளை வேர்ச்சொற்கள் இனம் காணல், சங்க இலக்கியத் தரவுதளம், உரை ஆய்வு, தேடுபொறி, அகராதி, குறியீட்டுத் தரவகம் போன்றவற்றை மேற்கொள்வதற்கு இவற்றை மூலப்பாட வடிவில் உள்ள பாடல்களையும், நூற்பாக்களையும் உரை வடிவிலும், தனிச் சொற்களாகவும் பிரிக்க வேண்டிய தேவை உள்ளது. செவ்வியல் தமிழ் சொற்பிரிப்புக் கருவி என்பது கொடுக்கப்பட்ட உள்ளீடு செய்யப்பெற்ற சங்கப்பாடல்களை ஏற்கெனவே உருவாக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மூலப்பாடத்திலிருந்து சந்தி பிரித்த பாடம், சொற்கள் பிரித்த பாடம் எனச் சங்க இலக்கியங்களைக் கணினி மொழியியல் ஆய்வுகளுக்குத் தேவையான தரவுகளாக உருவாக்கி அளிக்கக்கூடிய மென்பொருள். ஏற்கெனவே உருவாக்கப்பட்ட தரவகம், செவ்வியல் தமிழ் வேர்ச்சொற்கள் மற்றும் கணினிக்கான விதிகள்

இவற்றை அடிப்படையாகக் கொண்டு இக்கருவி உருவாக்கப்பட்டுள்ளன.

5. சொற்பிரிப்புத் தரவகம் உருவாக்கம்

5.1 தரவு உருவாக்கம்

சொல் பிரிப்புக் கருவியின் நிரலாக்கத்தின் அடிப்படைத் தேவை தரவுகள் உருவாக்கம். இக்கருவி விரைவாகச் செயல்பட்டு முடிவுகளைத் தருவற்கு உயர் அதிர்வெண் வரிசையில் தரவுகள் உருவாக்கப்பட வேண்டும். ஏற்கெனவே உருவாக்கப்பட்ட தரவுகளை நிகழ்வெண்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் முடிவுகளை உயர் அதிர்வெண் வரிசையில் கணினி புரிந்து கொள்ளும் வகையில் நிரலாக்கம் செய்ய வேண்டும். இதற்குத் தரவுகளை உள்ளீடு செய்தால் அவற்றைப் பிரித்து உயர் அதிர்வெண் வரிசையில் சொற்களைப் பிரித்து அளிக்கக்கூடிய மென்பொருளைப் பயன்படுத்தி அதற்கான பட்டியலைப் பெறலாம். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் உருவாக்கி வெளியிட்டுள்ள தமிழ்ச் சொல்லடைவு மென்பொருள் இதற்குப் பயன்படுத்தப்பட்டு நிகழ்வெண் வரிசையிலான தரவுகள் உருவாக்கப்பட்டது.



படம் 2: உயர் அதிர்வெண் தரவு உருவாக்கக் கருவி

மேற்கண்ட மென்பொருளில் ஏற்கெனவே சந்தி பிரித்த பாடத்தை உள்ளீடு செய்து அதற்கான பட்டியலைக் கருவிகள் என்னும் பகுதியில் சொல்லடைவு என்பதைத் தெரிவு செய்யும்போது அதற்கான தரவுகள் கிடைக்கும். இதை ஒரு தரவாக உருவாக்கிக்கொள்ள வேண்டும், பின்னர் மூலப்பாடத் தரவுகளை இக்கருவியில் உள்ளீடு செய்து அதற்கான உயர் அதிர்வெண் வரிசையில் சொற்களைத் தயார் செய்ய வேண்டும். பின்னர் இந்த இரண்டு தரவுகளையும் ஒப்பீடு செய்து அவற்றை இணைத்தரவுப் பட்டியலாக மாற்றி அமைக்க வேண்டும். இந்தத் தரவு இக்கருவி உருவாக்கத்திற்கு அடிப்படை ஆதாரமாக அமைகிறது.

5.2 சொற்பிரிப்புக் கருவி உருவாக்கம்

சொற்பிரிப்புக் கருவியின் உருவாக்கத்திற்குத் தரவு உயர் நிகழ்வெண் அடிப்படையில் வடிவமைக்கப்படுகிறது. கணினி சங்க இலக்கியச் சொற்களைப் பிரிக்கும்போது

அதிக எண்ணிக்கையிலான சொற்களை முதலில் பிரித்து அளிப்பதற்கு இந்த முறை பின்பற்றப்படுகிறது.



படம் 3: தரவு வரைபடம்

மேற்கண்ட தரவு வரைபடம் கருவி உருவாக்கத்தின் பல்வேறு படிநிலைகளை விளக்குகிறது. சொற்பிரிக்கப்பட வேண்டிய தரவுகள் உள்ளீடாகப் பெறப்படுகின்றன. பின்னர் ஏற்கெனவே உருவாக்கப்பட்ட உயர் அதிர்வெண் தரவுகளைக் கொண்ட அகராதியில் சென்று அச்சொல்லைத் தேடுகிறது. செவ்வியல் நூல்கள் 41இல் மூலப்பாடத்தில் இடம்பெற்றுள்ள மொத்தச் சொற்கள் 2,28,098. இந்தச் சொற்களில் அதிக எண்ணிக்கையிலான சொற்களைக் கணினி முதலில் மெட்டா தரவின் அடிப்படையில் தேடி எடுத்துக்கொள்ளும். இந்நிரலாக்கத்தின் முன் செயலாக்கம் மற்றும் முக்கியச் சொற்களின் தேர்வு என்பது அடிப்படையானது. உள்ளீடு செய்வதற்கான நிரல்கள் உருவாக்கப்பட்ட பின்னர் தரவைச் செயலாக்கி, ஒற்றை அல்லது கூட்டுச் சொற்களின் வடிவத்தில் முதன்மைச் சொற்களைப் பிரித்தெடுப்பதற்கான விதிமுறைகளை நிரல்கள் உருவாக்குகின்றன. அதன் பின்னர் இயல்பூக்கம் விதிப்படி தேவையற்ற இடைவெளிகள் போன்றவற்றை நீக்குகிறது. வார்த்தை உட்பொதிப்பின் அடிப்படையில், சொற்களின் தொடர்பைக் கணக்கிடுவதற்கான விதிகள் கணினிக்கு அளிக்கப்படுகின்றன. தேடி அச்சொல் கிடைத்தவுடன் அதை முக்கியச் சொல்லாக மெட்டா தரவில் சேமிக்கிறது. பின்னர் கணினிக்கு அளித்துள்ள பிரிப்பு விதிமுறைகளுக்கு உட்படுத்தி அச்சொற்களைப் பிரித்து அளிக்கிறது. இச்சுழற்சி முறை உள்ளீடு செய்யப்பெற்ற தரவின் அனைத்துச் சொற்களும் பிரித்து அளிக்கும் வரை நடைபெற்று இறுதியாக நிறைவுபெற்று முடிவுகளை அறிவிக்கிறது.

6. சொற்சூழல் கருவி அமைப்பு முறை

6.1 சொற்சூழல் கருவி 1.0

சொற்சூழல் கருவி மூலப்பாடத்திலிருந்து சந்தி பிரித்த பாடத்தைப் பிரித்து அளிக்கும் கருவியாக உருவாக்கப்பட்டுள்ளது. இதில் மூலப்பாடத்தில் இடம்பெற்றுள்ள பாடல் அல்லது நூற்பாக்களை உள்ளீடாகப் பின்வரும் படத்தில் உள்ள உரைப் பெட்டியில் அளித்துப் பின்னர் 'சந்தி பிரித்த பாடம்' என்னும் குமிழைச் சொடுக்குவதன் மூலம் உரைப்பெட்டியில் சந்தி பிரித்த பாடத்தைப் பெறலாம்.



படம் 4: சொற்சூழல் கருவி 1. 0

6.2 சொற்சூழல் கருவி 2.0

சந்தி பிரித்த பாடத்திலிருந்து சொற்கள் பிரித்த பாடத்தைப் பிரித்து அளிக்கும் கருவியாகச் சொற்சூழல் கருவி 2.0 உருவாக்கப்பட்டுள்ளது. இதில் சந்தி பிரித்த பாடத்தில் இடம்பெற்றுள்ள பாடல் அல்லது நூற்பாக்களை உள்ளீடாகப் பின்வரும் படத்தில் உள்ள உரைப்பெட்டியில் அளித்துப் பின்னர் 'சொற்கள் பிரித்த பாடம்' என்னும் குமிழைச் சொடுக்குவதன் மூலம் உரைப்பெட்டியில் சொற்கள் பிரித்த பாடத்தைப் பெறலாம்.

படம் 5: சொற்சூழல் கருவி 2. 0

7. சிக்கல்கள்

சொற்சூழல் கருவி உருவாக்கத்தைப் பொறுத்தவரையில் உருவாக்கத்தின்போது இரண்டு வகையான சிக்கல்கள் உள்ளன. ஒன்று தரவுவழிச் சிக்கல் செவ்வியல் தரவுகளில் இடம்பெற்றுள்ள சொற்கள் வெவ்வேறு சூழல்களில் வெவ்வேறு விதமாகச் செயல்படுகின்றன. சில தொடர்களில், வார்த்தை மற்றும் தொடரியல் அமைப்பு ஒரே மாதிரியாக இருக்கும். இலக்கண வகை வார்த்தையின் தொடரியல் கட்டமைப்பைப் பொறுத்தது. சில பாடல்களில் வார்த்தை வடிவம் மற்றும் தொடரியல் அமைப்பு ஒரே மாதிரியாக இருக்கும். இந்த வகையான தரவுகள் நிலைகள் மிகவும் சிக்கலானவை. இயந்திரம் அத்தகைய சொற்களைத் தவறாகப் பிரித்து அளித்துவிடும்.



படம் 6: சொற்பிரிப்பு முடிவுகள்

நிரலாக்கச் சிக்கலைப் பொறுத்தவரையில் கருவி தவறாகப் பிரித்த சொற்களை இனம்கண்டு அவற்றை விதிகளின் அடிப்படையில் புதிய விதிகளை நிரலாக்கம் செய்து கணினிக்குத் தொடர்ந்து அளித்துக்கொண்டே இருக்க வேண்டும். அவ்வாறு தொடர்ந்து விதிகளை அளிக்கும் போது ஏற்கெனவே உள்ள தரவுகளின் முடிவுகளை இப்புதிய விதிகள் மாற்றம் செய்ய வாய்ப்பு உள்ளது. எனவே அத்தரவுகளைத் தொடர்ந்து கண்காணித்துக்கொண்டே இருக்க வேண்டும். மேற்கண்ட தரவுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட கருவி 83% முடிவுகளைச் சரியாக அளித்துள்ளது.



படம் 7: இலக்கண வகை முடிவுகள்

இந்த முடிவுகளை இலக்கண வகைகளின்படி ஆய்விற்கு உட்படுத்தும்போது பின்னுருபுச் சொற்கள் அதிகச் சிக்கல்களை ஏற்படுத்துவதாக அமைகிறது.

8. முடிவுரை

இந்தக் கருவி செவ்வியல் நூல்களுக்கான சொற்பிரிப்புக்காக உருவாக்கப்பட்டது. இதற்கான தரவுகள் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் உ.வே.சா செம்மொழித் தரவகத்திலிருந்து எடுத்துப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கட்டுரையின் நோக்கம் செம்மொழி தமிழ் இலக்கிய ஆய்வை எளிதாக்கும் மொழி ஆய்வுக் கருவிகளை உருவாக்குவதற்கான தரவகங்களையும் அதற்கான கருவிகளையும் வடிவமைப்பது அடிப்படையாக அமைகிறது. செவ்வியல் தமிழ்த் தரவுகள் பாடல் வடிவிலும் நூற்பா வடிவிலும் உள்ள அமைப்பைக் கொண்டுள்ளது. எனவே செவ்வியல் ஆய்வுரையை எளிதாக்க உதவும் வகையில் இதுபோன்ற கருவிகளை உருவாக்க வேண்டிய அவசியம் உள்ளது. இதன் வழியாகக் கிடைக்கும் தரவுகள் இயற்கை மொழி ஆய்விற்கு அடிப்படை ஆதாரமாக அமையும். மேலும் ஏற்கெனவே உருவாக்கப்பட்டுள்ள இலக்கண விதிகள் திருத்தப்பட்டுச் செம்மைப்படுத்தப்படவும் இது பயன்படும். இவற்றைச் செம்மைப்படுத்துவற்கு மொழி வல்லுநர்கள், தமிழறிஞர்கள் துணைகொண்டு சொற்களைப் பகுப்பாய்வு செய்வதற்கான விதிகளை உருவாக்க வேண்டும். மேலும் விதிவிலக்கான தரவுகளுக்குப் புதிய விதிகளை உருவாக்கிக் கணினிக்கு அளிக்க வேண்டும். இவை அனைத்தும் முழுமை அடைந்து மேலும் தரவுகளை இணைக்கும்போது இக்கருவியை தற்காலத் தமிழ் மற்றும் பக்தி இலக்கிய ஆய்வுகளுக்கும் பயன்படுத்த முடியும்.

துணைநூல்கள்

1. Akshar Bharati, Vineet Chaitanya and Rajeev Sangal. 1995. “Natural language Processing A Paninian Perspective”, Prentice Hall of India, India,
2. Dipanjan Das, Andre F.T., and Martins. 2011. “A Survey on Automatic Text Summarization”, Language Technologies Institute, Carnegie Mellon University, 2007
3. Ela Kumar, “Natural Language Processing”, I.K. International Publishing House Pvt. Ltd., New Delhi,
4. Gupta, V., and Lehal, G.S. 2009. “A Survey of Text Mining Techniques and Applications”, Journal of Emerging Technologies in Web Intelligence, Volume 1: 1, pp. 60-76,
5. Mathiyan, P. 2007. “canka ilakkiyac collataivu”, Tamil University, Thanjavur
6. Nisheeth Joshi, and Iti Mathur. 2012. “Evaluation of Computational Grammar Formalisms for Indian Languages”, International Conference in Computer Engineering and Technology, organized by Jodhpur Institute of Engineering and Technology, Jodhpur,
7. Rajam, V.S. 1992. “A Reference Grammar of Classical Tamil Poetry”, The American Philosophical Society
8. Akilan R., Naganathan E R. 2015. “Morphological Analyzer for Classical Tamil texts a rule-based approach”, ARPN Journal of Engineering and Applied Sciences, Volume : 10, No: 20, ISSN : 1819-6608
9. Ramaswami, N. 2001. “Lexical Formatives and Word Formation Rules in Tamil”, in the journal of Languages in India, Volume 1: 8
10. https://ctlt.cict.in/
11. https://cict.in/

தமிழ்ச் சொல்வலை உருவாக்கமும் சவால்களும்

இராசேந்திரன் சங்கரவேலாயுதன்

ஆய்வுச்சுருக்கம்

இங்கு தமிழ்ச் சொல்வலை உருவாக்கம் பற்றி விளக்கப்படுகின்றது. இந்திய அரசின் நிதி நல்கையில் திராவிட மொழிகளின் சொல்வலைகள் திட்டத்தில் உருவாக்கப்பட்ட தமிழ்ச் சொல்வலை இந்தி சொல்வலை அடிப்படையில் அமைகின்றது. இத்தமிழ்ச் சொல்வலை கிட்டத்தட்ட 25,000 ஒருபொருள்பன்மொழியக் குழுமங்களைக் (synsets) கொண்டுள்ளது. இது தமிழின் மொத்தச் சொற்றொகையையும் கணக்கிடும் போது மிகக்குறைவான உள்ளடக்கம் ஆகும். தமிழ்ச் சொற்றொகையில் ஐந்து சதவீதம் கூட இந்தி-தமிழ் சொல்வலையில் உட்படுத்தப்படவில்லை என்று கூற இயலும். இனி இணைக்கப்படவேண்டிய கருத்துருக்களும் அவை உருப்படுத்தம் செய்யும் சொற்களும் ஏராளம்.

1. அறிமுகம்

சொல்வலை என்பது சொற்களைக் கருத்துருக்களாகக் கருதி அவற்றை ஒருபொருள் பன்மொழியக் குழுமங்களாகப் (synset) பகுத்து அவைகளுக்கிடையே உள்ள பொருண்மை மற்றும் சொல் உறவுகளை நிறுவி ஒரு வலையமைப்பாக வடிவமைப்பதாகும். சொல்வலை என்பதை சுருக்கமாக விளக்கவேண்டுமானால் இது ஒரு அகராதிப் பண்புக்கூறுகளும் பொருட்புல அகராதிப் (சொற்களஞ்சியம்) பண்புக்கூறுகளும் கொண்ட ஒரு சொல் மூலவளமாகும். தமிழுக்கு "காட்சி மூலப்பொருண்மையியல் சொற்களஞ்சியம்" உருவாக்கப்பட்டுள்ளது. இச்சொற்களஞ்சியம் தமிழ்ச் சொல்வலையாக விரிவுபடுத்தவேண்டும். சொற்கள் பெயர், வினை, பெயரடை, வினையடை போன்ற சொற்பாகுப்பாடுகளின் அடிப்படையில் பிரிக்கப்படாமல் நைடா முன்மொழிவதுபோல் பருப்பொருள்கள், நிகழ்வுகள், அருவங்கள், உறவன்கள் எனப் பாகுபடுத்தப்பட்டு பின்னர் சொற்பாகுபாடுகளுடன் இணைப்பது மொழியைத்தாண்டிச் சொற்களை இணைப்பது எளிமையானதும் மேம்பட்டதும் ஆகும். பயன்படுத்துவோருக்கு எளிமையான முறையில் சொல் குறித்த தேவையான செய்திகளைப் பெறவேண்டி கணினிமயமாக்கப்பட்டு ஒரு இணையதளச் சொல் தரவுதளமாக இதை எளிதில் மேம்படுத்தலாம்.

இந்தோ சொல்வலை

ஐ.ஐ.டி பம்பாயில் (IIT Bombay) உள்ள கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறையில் இந்திய மொழி தொழில்நுட்ப மையத்தில் (Center for Indian Language Technology CFILT/சி.எஃப்.ஐ.எல்.டி) இயற்கை மொழி செயலாக்க குழுவால் இந்தி சொல்வலை 2000-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

இந்திய மொழிச் சொற்களை உருவாக்கும் பெரிய நாடு தழுவிய திட்டம் இந்தோ சொல்வலைத் திட்டம் என்று அழைக்கப்பட்டது. இந்தோ சொல்வலை என்பது இந்தியாவின் 18 திட்டமிடப்பட்ட மொழிகளின் சொல்வலைகளால் இணைக்கப்பட்ட சொல்சார் அறிவுத் தளமாகும். இந்தி சொல்வலையிலிருந்து விரிவாக்க அணுகுமுறையைப் பயன்படுத்தி சொல்வலைகள் உருவாக்கப்பட்டன. இந்தி சொல்வலை இந்திய மொழியின்

இராசேந்திரன் சங்கரவேலாயுதன்
மின்னஞ்சல்: rajushush@gmail.com

முதல் சொல்வலையாகும். இது ஏற்றுக்கொள்ளப்பட்ட முறை ஆங்கிலத்திற்கான பிரின்ஸ்டன் சொல்வலை போலவே இருந்தது.

இந்தோ சொல்வலை பின்பற்றிய மூலோபாயத்தின் அடிப்படையில் போலந்து சொல்வலை, பிரின்ஸ்டன் சொல்வலையுடன் பொருத்தப்பட்டது/இணைக்கப்பட்டது.

திராவிட மொழிகளின் சொல்வலையாக்கம்

தமிழ் சொல்வலை உருவாக்க நடவடிக்கைகள் 2000-களிலேயே தொடங்கப்பட்டுவிட்டன. சென்னை ஏ.யூ.-கே.பி.சி ஆராய்ச்சி மையத்தில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் (இன்றைய தமிழ் இணையக் கல்விக்கழம்) நிதி நல்கையுடன் (4 லட்சம்) தமிழ்ச் சொல்வலை உருவாக்கப் பணி தொடங்கப்பட்டது. இராஜேந்திரனின் (2001) தமிழ்ச் சொற்களஞ்சியத்தின் மூலப்பொருண்மையியல் கட்டமைப்பைப் பயன்படுத்தி ஒரு சொல்வலை அமைப்பு உருவாக்கப்பட்டு நிதி நல்கை நிறுவனத்திற்குத் தரப்பட்டது.

சென்னையில் நடைபெற்ற ஒரு பட்டறையின் போது திராவிடச் சொல்வலையின் உருவாக்கம் பற்றி விவாதிக்கப்பட்டு ஒரு திட்டவரைவு தயாரிக்கப்பட்டது. "ஆங்கிலத்தை திராவிட மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கான இயந்திர மொழிபெயர்ப்பு கருவிகளை உருவாக்குதல்" ("Developing Machine Translation tools for translating English into Dravidian Languages") என்ற தலைப்பில் ஒரு திட்டம் மனிதவள அமைச்சகத்தால் 2009இல் அனுமதிக்கப்பட்டது. இதில் திராவிட மொழிகளுக்கான உருவாக்கம் ஒரு பாகமாக அமைந்தது. திராவிட மொழிகளின் சொல்வலை உருவாக்கத்தில் நான்கு நிறுவனங்கள் பங்கேற்றன. இந்த திட்டம் 2011இல் முடிவுக்கு வந்தது. கிட்டத்தட்ட 15000 ஒருபொருள்பன்மொழிகளை தங்களுக்கு ஒதுக்கப்பட்ட மொழிகளுக்காக ஒவ்வொரு நிறுவனமும் முடித்தளித்தது.

மீண்டும் திராவிட மொழிகளின் சொல்வலைகளின் உருவாக்கம் இந்திய அரசின் மின்னணு மற்றும் தகவல்தொடர்புத் தொழில்நுட்பத் துறையின் நிதி நல்கையில் "திராவிட சொல்வலைகளின் உருவாக்கம், "தெலுங்கு, தமிழ், கன்னடம் மற்றும் மலையாளத்திற்கான ஒருங்கிணைந்த சொல்வலை (Development of Dravidian WorldNet: An Integrated WordNet for Telugu, Tamil, Kannada and Malayalam)" என்ற திட்டத்தின் கீழ் 2011 திசம்பரில் தொடங்கப்பட்டது. திராவிட மொழிகளின் சொல்வலைகளின் உருவாக்கம் இந்தோ சொல்வலையின் ஒருபாகமாக அமைந்தது. திராவிட சொல்வலையின் உருவாக்கச் செயல்பாடு மைசூர் பல்கலைக்கழகத்தில் கன்னடச் சொல்வலை, தமிழ் பல்கலைக்கழகத்தில் தமிழ்ச் சொல்வலை, திராவிடப் பல்கலைக்கழகத்தில் தெலுங்குச் சொல்வலை, அமிர்தா விஷ்வ வித்யபீடம் பல்கலைக்கழகத்தில் மலையாளச் சொல்வலை என மேற்கொள்ளப்பட்டது. 35000 ஒருபொருள்பன்மொழிகளை இலக்காக்கி இத்திட்டம் 2015 வரை நடைபெற்றது.

மனிதவள மேம்பாட்டு அமைச்சின் நிதி நல்கையில் தஞ்சையிலுள்ள தமிழ்ப்பல்கலைக் கழகமும் கோயம்புத்தூரில் உள்ள அமிர்தா விஷ்வ வித்யாபீடமும் குப்பத்திலுள்ள திராவிடப் பல்கலைக் கழகமும் மைசூரிலுள்ள மைசூர் பலகலைக்கழகமும் இணைந்து திராவிட மொழிகளின் சொல்வலைகளை உருவாக்கும் திட்டதைச் செயல்படுத்தின. இச்சொல்வலைகள் இந்தோ சொல்வலை உருவாக்கத் திட்டத்தின் பகுதியாக அமைந்து. திராவிட மொழிகளின் சொல்வலைகள் ஏற்கனவே உருவாக்கப்பட்டு இணையதளத்தில் பயன்பாட்டில் விடப்பட்டுள்ள இந்தி சொல்வலையை அடிப்படையாகக்கொண்டு விரிவாக்க முறை அடிப்படையில் திராவிட மொழிகளின் சொல்வலைகள் உருவாக்கப்பட்டன. தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ்ச் சொல்வலையையும் திராவிடப் பல்கலைக்கழகம் தெலுங்கு சொல்வலையையும் அமிர்தா பல்கலைக்கழகம் மலையாளச் சொல்வலையையும் மைசூர் பல்கலைக்கழகம் கன்னடச் சொல்வலையையும் உருவாக்கி வருகின்றன. இந்தத் திட்டத்தின் முக்கியக் குறிகோள்கள் பின்வருவனவாகும்:

- திராவிட மொழிகளுக்கு விரிவான உயர்ந்த சிறப்புவாய்ந்த பன்மொழியச் சொல்சார் தரவுமையம் உருவாக்குதல்
- மொழிச் சொல்வலைகளை ஒன்றாக இணைக்கும் மொழிச் சுதந்திரமான பொருண்மைக் கருத்துருக்களை உருவாக்குதல்
- எல்லாத் திராவிட மொழிகளுக்கும் தகவலின் பொருண்மையியல் பாகுபாட்டை நிலைபேறாக்கம் செய்தல் மற்றும் பயன்பாடுகளின் உருவாக்கத்திற்கு மூலவளங்களைத் தருதல்
- ஏற்கனவே இருக்கும் மூலவளங்களைப் பயன்படுத்திச் சொல்வலைகளை உருவாக்குதல்

2. தமிழ்ச் சொல்வலைக்கான மூலவளங்கள்

இந்தோ சொல்வலையின் பாகமாக அமையும் தமிழ்ச் சொல்வலை ஆங்கிலச் சொல்வலையுடன் இந்தி சொல்வலை வழி இணைக்கப்பட்டுள்ளது. தமிழ்ச் சொல்வலை இந்தி சொல்வலையின் அடிப்படையில் அமையாமல் தனியாக உருவாக்கப்பட்டால் சிறப்பாக அமையும் என்று கூற இயலும். இத்தகைய தமிழ் சொல்வலை உருவாக்கத்திற்கு மூல வளங்களாகத் தமிழ்ப் பல்கலைகழக மொழியியல் துறையில் இராசேந்திரனின் மேற்பார்வையில் சமர்ப்பிக்கப்பட்ட

ஆய்வேடுகளும் இராசேந்திரனால் செய்யப்பட்ட தமிழ்ச் சொற்பொருண்மை ஆய்வுகளும் (சக்திவேல் & இராசேந்திரன் 1994, இராசேந்திரன் 2001, இராசேந்திரன் & பாஸ்கரன் 2006, இராசேந்திரன் & பாக்கியராஜ் 2019) அமையும். இராசேந்திரன் (2001) தற்காலத் தமிழ்ச் சொற்களஞ்சியம் இச்சொல்வலையாக்கத்திற்குப் பெரிதும் உதவும். அவரது சொற்களஞ்சியத்தின் மூலம் வெளிப்படும் மூலப்பொருண்மையியலும் (ontology) அவர்தம் மூலப்பொருண்மையியல் ஆய்வுகளும் (இராசேந்திரன் & அனிதா 2019) தமிழ்ச் சொல்வலை உருவாக்கத்திற்கு பெரிதும் பயனுள்ளதாக அமையும். மேலும் தமிழுக்கென்ற சொல்வலை உருவாக்கத்தில் முன்னோடியாக விளங்கும் தொடக்கநிலையில் உள்ள தமிழ்ச் சொல்வலை அவரால் உருவாக்கப்பட்டு இணையதளத்தில் திறந்த மூலமாக (open source) இடப்பட்டுள்ளது. இதுவும் தமிழ்சொல்வலை உருவாக்கத்திற்கு துணையாக அமையும்.

3. அகராதியும் சொல்வலையும்

அகராதியானது சொல்லின் எழுத்துவடிவு, பொருள், பயன்பாடு இவற்றைக் காணப் பொதுவாய்ப் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் சொல்வலை ஒரு பொருண்மை அகராதியாகும் (semantic dictionary). சொல்வலை சொற்களுக்கு வர்ணனையும் விளக்கமும் மாதிரி எடுத்துக்காட்டுகளும் தரும். சொற்களுக்கு இடையே உள்ள பொருண்மை உறவுகளை மிகத்தெளிவாகப் பயன்படுத்தக்க விதத்தில் கூறும். உச்சரிப்பு, சொல்லாக்க உருபனியல் செய்திகள், சொல்மூலம் அல்லது வரலாறு இவற்றைத் தராது.

4. சொற்களஞ்சியமும் சொல்வலையும்

முதல் சொற்களஞ்சியம்/பொருட்புல அகராதி (thesaurus) ராஜெஸ்ட் என்பரால் உருவாக்கப்பட்டது.

இது பொருண்மை ஒழுங்கமைப்பைக் கொள்கையாகக்கொண்டு உருவாக்கப்பட்டது. கருத்துரு அடிப்படையில் அமைக்கப்பட்டது. பயன்பாட்டாளர் தங்கள் மனதிலுள்ள கருத்துருவைக் கொண்டு சொற்களைக் கண்டுகொள்ள இது உதவும். சொல்வலைகளும் சொற்களஞ்சியம் போல அமையும். இதன் கட்டுமான அலகு ஒருபொருள்பன்மொழியக் குழுமம் ஆகும். ஒருபொருள்பன்மொழியக் குழுமத்தில் ஒரு கருத்துருவை வெளிப்படுத்தும் எல்லாச் சொற்களும் குழுமம் செய்யப்பட்டிருக்கும். சொல்வலையைப் பயன்படுத்துபவர் மனதிலுள்ள கருத்துருவைக் கொண்டு சொற்களைக் கண்டுகொள்ள இயலும். ஒருபொருள்பன்மொழியக் குழுமங்கள் உள்ளடங்கு-உள்ளடக்கு மொழியம் (hyponymy-hypernymy), சினைமொழியம்-முழுமொழியம் (meronymy-holonymy or part and hole), உட்படுத்து மொழியம் (entailment) போன்ற உறவுகளால் இணைக்கப்பட்டுள்ளன. சொல்வலை கருத்து நிலையையும் சொல் நிலையையும் தெளிவாகப் பிரிக்கின்றது. இந்த வேறுபாடு சொல் உறவுகளுக்கும் கருத்துருக்களுக்கும் உள்ள வேறுபாட்டில் பிரதிலிபலிக்கின்றது. சொற்களஞ்சியத்திற்கு அப்பாற்பட்டு சொல்வலையில் சொற்களுக்கும் கருத்துருக்களுக்கும் உள்ள உறவுகள் வெளிப்படையாகக் கூறப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. பயன்படுத்துபவர் உறவுகளைத் தேர்ந்தெடுத்து, ஒரு கருத்துருலிருந்து மற்றொரு கருத்துருவுக்குச் சென்று கருத்துரு வெளியிடத்தில் வலம் வர இயலும்.

5. சொல் வலையில் உறவுகள்

சொல்வலை கருத்துரு-பொருண்மை உறவுகளுக்கும் சொற்களை இணைக்கின்ற சொல் உறவுகளுக்கும் வேறுபாடு காட்டுகின்றது. ஆனால் சொல் நோக்கில் கவனம் செலுத்துபவர் முதன்மையாகச் சொல் உறவுகளைப் பயன்படுத்துவர். சொல்வலை பொருண்மை உறவுகளால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. சொல்வலை வேறுபட்ட தொடரியல் வகைப்பாடுகளில் அடங்கும் சொற்களை இணைக்கும் அடுக்கு உறவுகளைக் கொண்டிருக்கவில்லை. நான்கு முக்கியத் தொடரியல் வகைப்பாடுகளான பெயர், வினை, பெயரடை, வினையடை என்பன தனித்தனியாகத் தரப்பட்டுள்ளன. பெயர்கள் படிநிலை அமைப்புகளாகவும் வினைகள் வேறுபட்ட உட்படுத்து உறவுகளாலும்; (entailment relation) பெயரடைகளும் வினையடைகளும் இ-பரிமாண உயர்வெளியிடத்திலும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

6. பெயர்ச்சொல்வலை

பெயர்ச்சொல்வலையில் அடிப்படை பொருண்மை உறவு ஒருபொருள்பன்மொழிய உறவாகும். ஒருபொருள்பன்மொழியக் குழுமங்கள் அடிப்படைக் கட்டுமான அலகுகளாகும். ஒருபொருள்பன்மொழியக் கருத்துச்சாயல் என்பது எல்லாச் சூழல்களிலும் ஒன்றையொன்று இடம்பெயர்த்தல் என்பதை உட்படுத்தாது. இடம்பெயர்த்தல் என்ற அளவியால் இயற்கை மொழிகளுக்குக் குறைந்த எண்ணிக்கையிலான ஒருபொருள் பன்மொழிகள் மட்டுமே வரும். சொல்வலையில் ஒரு பொருள் பன்மொழிகளைக் குறைந்தது சில சூழல்களில் இடம் பெயர்க்கலாம். ஒருபொருள்பன்மொழியக் குழுமத்திற்கு ஒரு பொருள்தான் உண்டு. எ.கா. {நூல், புத்தகம், புஸ்தகம்} "படிப்பதற்கு ஏற்றவகையில் அட்டைபோட்டு இணைத்த அச்சடித்த தாள்களின் தொகுப்பு" சொல்வலையில் ஒருபொருள்பன்மொழியக் குழுமங்கள் பொருண்மை உறவுகளால் இணைக்கப்பட்டுள்ளன. பெயர்களை ஒழுங்குபடுத்தப் பயன்படுத்தப்படும் மிக முக்கியமான

உறவு உள்ளடங்கு மொழியமாகும் (hyponymy). இந்த உறவுதான் சொற்களைச் சொற்படிநிலை அமைப்பில் ஒழுங்குபடுத்துகின்றது.

6.1. சொற் படிநிலை அமைப்பு

உள்ளடங்கு உறவுகள் பற்றிய செய்திகள் மரபு அகராதிகளில் வரையறை விளக்கங்களாகத் தரப்பட்டிருக்கும்.

எ.கா.

குயில் – இனிய குரலுடைய கரிய நிறப்பறவை.

பறவை – இரு கால்களும் அலகுகளும் உடைய, உடலில் இருபக்கங்களிலும் இறகுகள் உள்ள பறப்பதற்கு ஏற்றவகையில் சிறகுகளும் கொண்ட விலங்கினம்.

விலங்கினம் – தானாகவே இயங்கும் உணர்வு உறுப்புகளும் செல்லுலோஸ் இல்லாத செல் சுவர்களும் உள்ள உயிரினம்.

உயிரினம் – உயிர் வாழ்கின்ற ஒன்று.

ஒவ்வொரு உள்ளடக்குச் சொல்லும் மிகப்பொதுவான உள்ளடக்குச் சொல்லுக்குக் கொண்டு செல்லும். உள்ளடக்கு மொழியத்தைச் சொற்களுக்கு இடையே உள்ள உறவாக உருப்படுத்தம் செய்ய இயலாது. உள்ளடக்கு மொழியம் அகராதிப்படுத்தப்பட்ட கருத்துருக்களுக்கு இடையே உள்ள உறவாகும். ஒரு சொற்படிநிலை அமைப்பை உள்ளடக்கு உறவால் இணைக்கப்பட்ட ஒருபொருள்பன்மொழியக் குழுமங்களின் தொடர்ச்சியால் மீட்டுருவாக்கம் செய்யலாம்.

{குயில்}@ → {பறவை}@ → {விலங்கினம்}@ → {உயிரினம்}

உள்ளடங்கு உறவுக்கு இணையான உள்ளடக்கு உறவையும் தரலாம். உள்ளடங்கு–உள்ளடக்கு மொழிய உறவுகளால் ஒரு படிநிலை ஒழுங்குமுறை வெளிப்படும். இந்த வகையில் வரும் படிநிலைகள் கணினியியலார்களால் அறிவை உருப்படுத்தம் (Knowledge representation) செய்யும் வழியாகப் பயன்படுத்தப்படுகின்றது.

6.2. தனித்தன்மையான தொடக்கிகள்

பெயர்கள் எல்லாவற்றையும் ஒரே படிநிலை அமைப்பில் தரவேண்டி படிநிலைக் கொள்கையை நீட்சி செய்யலாம். சொல்வலை பெயர்களைத் தனித் தன்மையான தொடக்கிகள் (unique beginners) அமையப் பல படிநிலை அமைப்புகளாகப் பகுத்துள்ளது. தனித்தன்மையான தொடக்கிகள் சொற்பொருண்மையியல் பொருண்மைக்கூறாய்வின் பொருண்மைக் கூறுகளுடன் ஓரளவுக்குப் பொருந்தும்.



மெய்ப்பொருள் மூலாய்வு அமைப்பைக் (ontological structure) காட்டும் வகையிலான சொற்களின் உருப்படுத்தம் சொற்களின் பொருண்மை மரபுரிமைச் செயற்பாங்கை (Lexical inheritance) வெளிக்கொணர்கின்றது.

எ.கா. {ஊர்தி, வாகனம்}@ → {நிலத்தில் ஓடும் ஊர்தி}@ → {பொறியால் ஓடும் ஊர்தி}@ → {நான்குசக்கர ஊர்தி}@ → {பயணஊர்தி}@ → {பேருந்து}}

List of 25 unique beginners for noun source files of EuroWordNet

{act, activity}	{natural object}
{animal, fauna}	{natural phenomenon}
{artifact}	{person, human being}
{attribute}	{plant, flora}
{body}	{possession}
{cognition, knowledge}	{process}
{communication}	{quantity, amount}
{event, happening}	{relation}
{feeling, emotion}	{shape}
{food}	{state}
{group, grouping}	{substance}
{location}	{time}
{motivation, motive}	

இராசேந்திரனால் உருவாக்கப்பட்ட தமிழ்ச் சொற்களஞ்சியம் (இராசேந்திரன் 2001) தமிழ்பெயர்ச்சொற்களின் சொற்றொகையை நைடாவைப் பின்பற்றி (Nida 1976a) வகைப்பாட்டியல் வடிவில் தருகின்றது.

6.3. வேறுபடுத்தும் பொருண்மைக் கூறுகள்

பெயர்களின் படிநிலை அமைப்பு உள்ளடங்கு–உள்ளடக்கு உறவால் உருவாக்கப்பட்டாலும் விளக்கங்கள் ஒரு கருத்துருவை மற்றொரு கருத்துருவிலிருந்து பிரிக்கும் பொருண்மைக் கூறுகளால் தரப்படுகின்றது.

எ.கா. குயில் – பாடுகின்ற சிறிய கரிய நிறப்பறவை

குயில் என்பதை மூன்றுவகைப் பட்ட வேறுபடுத்தும் பண்புக்கூறுகளுடன் தொடர்புபடுத்தலாம்.

1. அடைகள்: சிறிய, கரிய
2. பாகங்கள்: அலகு, சிறிய
3. செயல்பாடுகள்: பாடு, பற

6.4. சினை–முழு மொழியம்

சொற்களைப் படிநிலை அமைப்பில் தருவதில் சினை–முழு உறவு முக்கியப் பங்கு வகிக்கின்றது.



சினை–முழு மொழிய உறவு பின்வரும் துணை வகைகளை உள்ளடக்கும்:

1. முழுப் பொருளுக்கும் அதன் உறுப்புகளுக்கும் இடையிலான உறவை வெளிப்படுத்துவன (பாகம், எ.கா. கை – விரல்)
2. முழுமைக்கும் அதிலிருந்து பிரிந்த பகுதிக்கும் உள்ள உறவை வெளிப்படுத்துவன (பகுதி, எ.கா. துண்டு – உலோகம்)
3. இடங்களுக்கும் விரிந்த இடங்களுக்கும் உள்ள உறவை வெளிப்படுத்துவன (இடம், எ.கா. பாலைவனச்சோலை – பாலைவனம்)
4. குழுமத்திற்கும் அதன் அங்கத்தினர்களுக்கும் உள்ள உறவை வெளிப்படுத்துவன (எ.கா. மந்தை – ஆடு)
5. பொருள்களுக்கும் அது உருவாக்கப்பட்ட உருப்பொருள்களுக்கும் உள்ள உறவை வெளிப்படுத்துவன (ஆன, எ.கா. புத்தகம் – காகிதம்)

பின்வரும் அட்டவணையில் பெயர்வலையில் கூறப்பட்டுள்ள பொருண்மை–சொல் உறவுகள் பட்டியலிடப்பட்டுள்ளன:

உறவுகள்	துணை வகைகள்	எடுத்துக்காட்டுகள்
ஒருபொருள் பன்மொழியம்		புத்தகம், நூல்
உள்ளடங்கு – உள்ளடக்கு மொழியம்		விலங்கு–பாலூட்டி
உள்ளடக்கு–உள்ளடங்கு மொழியம்		பசு–பாலூட்டி
முழு–சினை மொழியம்	முழுமை–பாகங்கள் பாகம்–முழுமை அங்கத்தினர்கள்–குழு குழு–அங்கத்தினர்கள் பகுதி–முழுமை இடம்–பரந்த இடம் பொருள்–உருப்பொருள்	மேசை–கால் சக்கரம்–வண்டி படைத்தலைவர்–படை துறை–பேராசிரியர் துளி–கண்ணீர் பாலைவனச்சோலை–பாலைவனம் புத்தகம்–தாள்
ஈரிணை எதிர்நிலை	நிரலாக்கம் செய்யத்தக்கது துணை எதிர்நிலை தனிப்பட்டவை துருவ எதிர்நிலை பரஸ்பர சமூகப்பாத்திரங்கள் சொந்தங்கள் கால உறவுகள் இட உறவுகள்: செங்கோண எதிர்நிலை இட உறவுகள்: நேர் எதிர்நிலை கிழக்கு–மேற்கு பல்லிணை எதிர்நிலை: சங்கிலி சுற்று	நல்லவன்–கெட்டவன் பகல்–இரவு அஃறிணை–உயர்திணை ஆண்–பெண் மருத்துவர்–நோயாளி அம்மா–மகள் காலை–மாலை வடக்கு–கிழக்கு வடக்கு–மேற்கு மேற்கு–தெற்கு கிழக்கு–தெற்கு வடக்கு–தெற்கு ஒன்று, இரண்டு, மூன்று,... ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி

7. வினைச் சொல்வலை

வினைகள் ஒரு மொழியின் சொல் மற்றும் தொடரியல் வகைப்பாட்டில் முக்கியப் பங்கு வகிக்கின்றது. இதன் பயனிலை–பங்கெடுப்பாளர் அமைப்பு (predicate argument structure) இது வரும் வாக்கியத்தின் சாத்தியமான அமைப்புகளைத் தீர்மானிக்கின்றது.

எ.கா.

காற்று வீசுகின்றது.

அவன் சென்னையிலிருந்து தஞ்சாவூர் வந்தான்.

அவள் மாம்பழம் சாப்பிடுகிறாள்.

அவர் அவளிடமிருந்து ஒரு லட்ச ரூபாய்க்கு ஒரு கார் வாங்கினார்.

7.1. வினைகளைப் பொருண்மைக் களங்களாகப் பிரித்தல்

யூரோ சொல்வலை வினைகளைச் 15 பொருண்மைக் களங்களாகப் பிரிக்கின்றது (Vossen 1998).

1. Verbs of bodily functions and care (Ex. sweat, shiver, faint, etc.)
2. Verbs of change (Ex. change, etc.)
3. Verbs of communication (Ex. stammer, appeal, bet, teach, creak, etc.)
4. Competition Verbs (Ex. fight, etc.)
5. Consumption Verbs (Ex. drink, etc.)
6. Contact Verbs (Ex. hit, scrub, wipe, etc.)
7. Cognition Verbs (Ex. infer, guess, assume, etc.)
8. Creation Verbs (Ex. engrave, print, etc.)
9. Motion Verbs (Ex. gallop, race, fly, swim, etc.)
10. Emotion or Psych Verbs (Ex. amuse, charm, etc.)
11. Stative Verbs (Ex. surround, cross, etc.)
12. Perception Verbs (Ex. watch, spy, etc.)
13. Verbs of Possession (Ex. have, rob, bestow, auction, etc.)
14. Verbs of Social Interaction (Ex. impeach, franchise, excommunicate, etc.)
15. Weather Verbs (Ex. rain, thunder, snow, hail, etc.)

இராசேந்திரன் (2001) நைடாவைப் (1975a) பின்பற்றி வினைகளைப் பௌதிக வினைகள் (பெய், வீசு), உடல்கூறு வினைகள் (பிரசவி, வியர்), புலனுணர்வு வினைகள் (கசு, குளிர்), உணர்ச்சி வினைகள் (கோபப்படு, வேதனையடை), அறிவுசார் வினைகள் (ஊகி, கணி), கருத்துப்பாற்ற வினைகள் (பேசு, இகழ்), சலன வினைகள் (நகர், நட), தர்க்க வினைகள் (அடி, உடை), உடைமைமாற்ற வினைகள் (கொடு, விடு), பல்கூட்ட வினைகள் (சமையல் செய்) எனப்பிரித்துள்ளார்.

7.2. வினைகளுக்குத் தனித்தன்மையான தொடக்கிகள்

வினைச் சொற்களஞ்சியத்தைப் பொருண்மைக் களங்களாகப் பிரிப்பது வினைத் தரவுகளை ஒழுங்கு முறைபடுத்துவதோடு சொற்களஞ்சியத்திலுள்ள எல்லா வினைகளுக்கும் ஒரு பொதுவான வேர் அல்லது தனித்தன்மையான தொடங்கிகள் இல்லாத குறையையும் நிவர்த்தி செய்கின்றது.

பெயர்களைப் போல வினைகளையும் ஒருபொருள் பன்மொழியக்குழுமங்களாகக் குழும இயலும். ஆனாலும் நாம் ஒருபொருள்பன்மொழி என்பது ஒன்றையொன்று இடம் பெயர்க்கும் சொற்கள் என்று வரையறை செய்தால் வினையில் ஒருபொருள்பன்மொழிகள் இல்லாமல் போகும் அல்லது மிக அரிதாகத் தான் இருக்கும்.

7.3. வினைகளின் பொருண்மைக் கூறாய்வு

வினைகளை அவற்றின் பொருண்மைப் பண்புக்கூறுகளால் வரையறை விளக்கம் செய்ய இயலும். வினைகளைச் சிறு பொருண்மைக்கூறுகளாகப் பிரிக்க இயலும் தன்மை காரணமாக எளிய செயல்களால் கலவைத் தன்மையான செயல்களை விளக்க இயலும்.

கொல் – சாகச் செய்தல்

எறி – ஒருவர் தன் கையிலிருந்தப் பொருளை விசையால் போகச் செய்தல்

ஓட்டு – ஒருவர் ஒன்றை ஓடச் செய்தல்

7.4. வினைகளுக்கிடையிலான சொல் மற்றும் பொருண்மை உறவுகள்

நாம் நான்கு வகையான உட்படுத்து உறவுகளை (entailment) வெளிப்படுத்தலாம்:



7.5. வினைகளுக்கிடையிலான பல்பொருள் ஒருமொழியம்

பெயர்களை விட வினைகள் எண்ணிக்கையில் குறைந்தவை. வினைகளின் பல்பொருள் ஒருமொழியம் பெயர்களின் பல்பொருள் ஒருமொழியத்தைக் காட்டிலும் அதிகம். வினைகளின் பொருண்மை நெகிழ்ச்சி அதன் பகுப்பாய்வைக் கடினப்படுத்துகின்றது. வினைகள் அவை எடுக்கும் பங்கெடுப்பவர் அமைப்பு (argument structure) அடிப்படையில் தங்கள் பொருளை மாற்றும். ஆனால் பெயர்களின் பொருண்மை வினைகளின் பொருண்மைகளைக் காட்டிலும் நிரந்தரமானது.

7.6. தொடரியல் பண்புகளும் பொருண்மை உறவுகளும்

தற்போது அகராதியில் சொற்களுக்கு அதன் தொடரியல் பண்புக்கூறுகளைத் தரும் போக்குக் காணப்படுகின்றது. வினைகளைப் பொருண்மை உறவுகளாக மட்டும் பார்ப்பது தொடரியல் பற்றிய சில செய்திகளைத் தரும். வினையைப்பற்றி தெரிந்து கொள்ள வினையின் தொடரியல் பண்புகளைச் சொல்வலையில் தருவது குறித்த சாத்தியம் ஆராயப்படவேண்டும்.

உறவுகள்	விளக்கம்/துணை வகை	எடுத்துக்காட்டு
ஒருபொருள் பன்மொழியம்	இடம்பெயர்க்க இயலும் செயல்கள்	தூங்கு–உறங்கு
பகுதி–முழுமை மொழியம்	உட்படும்–உட்படுத்தும் செயல்	பற–பிரயாணி
வகை உறவு	செயல்–துணைவகை	நட–நொண்டு
உட்படுத்து உறவு	செயல்–காரணச்செயல்	உயர்–உயர்த்து
”	செயல்–முன்னூகச்செயல்	வெல்–முயல்
எதிர்நிலை	எதிர்மறை	கூடு–குறை
	மறுதலை	வில்–வாங்கு
	திசை எதிர்நிலை	புறப்படு–வந்துசேர்

8. பெயரடை மற்றும் வினையடைச் சொல்வலை

சொல்வலை பெயரடைகளை இரு முக்கியமான வகுப்புகளாகப் பிரிக்கின்றது: வர்ணனைப் பெயரடைகள் (descriptive adjectives) மற்றும் தொடர்புப் பெயரடைகள் (relational adjectives). வர்ணனைப் பெயரடைகள் தலைப் பெயர்களுக்கு இருதுருவ அடைகளின் மதிப்பீட்டைத் (values of bipolar attributes) தருகின்றது; எனவே ஈரிணை எதிர்நிலைகள் (binary oppositions) (எதிர்மறை– antonymy) மற்றும் பொருண்மை ஒற்றுமையால் (similarity of meaning) ஒழுங்கமைக்கப்படுகின்றது.

வர்ணனைப் பெயரடை (descriptive adjective): பெரிய, கனமான

தொடர்புப் பெயரடை (relational adjective): பொருளாதார, சகோதர

குறிப்பு அடைசெய்யும் பெயரடை (reference modifying adjectives): பழைய, முன்னாள்

ஒரு வர்ணனை அடை ஒரு பெயருக்கு ஒரு மதிப்பு தரும். எடுத்துக்காட்டாக, கனமான, இலேசான என்பது எடை என்பதன் அடைமொழிகளாகும்; தாழ்ந்த, உயர்ந்த என்பன உயரம் என்பதன் அடைமொழிகளாகும். எதிர்மறை (antonymy) தான் வர்ணனைப் பெயரடைகளில் அடிப்படையானதாகும். எதிர்மறை ஒருபொருள்பன்மொழியத்தைப் போன்று சொல்வடிவுகளுக்கு இடையிலான உறவாகும். எதிர்மறைப் பெயரடைகள் அடைமொழியின் எதிர்செய்யும் மதிப்புகளை வெளிப்படுத்துகின்றது (எ.கா. கனமான, இலேசான என்பன எடை அடைமொழியின் எதிர் துருவங்களாகும்.) நேரடியான எதிர்மறைகள் இல்லாத பெயரடைகள் (எதிர்மறை ஆற்றல் குறைவாய் உள்ள பெயரடைகள்) எதிர்மறைப் பெயரடைகளுடன் “போல” உறவு கொண்டிருக்கும்:

உறவுகள்	தொடர்புபடுத்தும் சொல்வகைப்பாடு	எடுத்துக்காட்டு
எதிர்மறை (நிரலாக்கம் செய்ய இயலுவது)	பெயரடை–பெயரடை	அழகான–குரூரமான
எதிர்மறை (நிரலாக்கம் செய்ய இயலாதது)	பெயரடை–பெயரடை	உயிருள்ள–செத்த
ஆக்கவடிவு	பெயரடை–பெயர்	அழகான–அழகு
அடைமொழி	பெயர்–பெயரடை	வடிவம்–சின்ன
தொடர்பு	பெயரடை–பெயர்	பொருளாதார–பொருளாதாரம்
போல	பெயரடை–பெயரடை	பாரமான–கனமான

9. சொல்வலையை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல்

சொல்வலையை நான்கு ஒழுங்கமைப்புகளாகப் பகுக்கலாம்.

1. சொல்வள ஒழுங்குமுறை (Lexical resource system)
2. ஒருங்கிணைக்கும் ஒழுங்குமுறை (Compiler system)
3. சேகரிப்பு ஒழுங்குமுறை (Storage system)
4. மீளப்பெறும் ஒழுங்குமுறை (Retrieval system)

மீளப்பெறும் ஒழுங்குமுறை பின்வரும் செயல்பாடுகளை உள்ளடக்கும்:

1. வகைப்பாட்டு மற்றும் வலைப்பின்னல் திட்டத்தை மின்தட்டச்சு அமைப்பாக மாற்றுகின்றது.
2. வகைப்பாட்டு மற்றும் வலைப்பின்னல் திட்டத்தைத் தகவல் மீட்பு ஒழுங்கமைப்பாக மாற்றுகின்றது.
3. இணைய மீளப்பெறுதல்: வகைப்பாட்டு மற்றும் வலைப்பின்னல் திட்டத்தை குறி தேடலுடன் இணைப்பது.

10. முடிவுரை

சொல்வலை என்பது சொற்களைக் கருத்துருக்களில் அடக்கி அவற்றை ஒருபொருள் பன்மொழியக் குழுமங்களாகப் (synsets) பகுத்து அவைகளுக்கிடையே உள்ள பொருண்மை மற்றும் சொல் உறவுகளை நிறுவி ஒரு வலையமைப்பாக வடிவமைப்பதாகும். சுருக்கமாகச் சொல்வலை என்பதை விளக்கவேண்டுமானால் அது ஒரு அகராதிப் பண்புக்கூறுகளும் பொருட்புல அகராதிப் (சொற்களஞ்சியம்) பண்புக்கூறுகளும் கொண்ட ஒரு சொல் மூலவளமாகும். கால வளர்ச்சிக்கேற்பச் சொல் விளக்க அகராதிகளும் சொற்களஞ்சியங்களும் கணினிமயமாக்கப்பட்டுச் சொல்வலை என்ற புதிய வடிவைப் பெற்றுள்ளன. சொல்வலை பயன்படுத்துவோர் தேவையான தகவல்களைக் கணினி வழி எளிதாகப் பெறவேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது.

இன்று இணைய தளங்களில் தரப்படும் தரவுகள் நாளுக்கு நாள் விரிவடைந்து வருகிறது. உலகளவு விரிந்த வலை (World Wide Web), இணையதளத் தரவு மையங்கள் மற்றும் நிர்வகிக்கப்பட்ட தகவல் ஒழுங்கமைப்புகள், ஆவணக் காப்பகங்கள் (document archieves) மற்றும் உள்ளிடை இணையங்களின் ((Intranet) வளர்ச்சி என்பன யாவும் தகவல்களின் மூலவளமாகச் சேவை செய்கின்றன. புதிய இடைமுகங்களாலும் கருவிகளாலும் தகவல் அணுகல் மேம்பட்டுள்ளது; ஆனால் தகவலானது இப்போதும் பயன்பாட்டாளரால் தரப்படுகின்ற சில முக்கியச் சொற்களால் (Keywords) இணக்கமானதாக அல்லது பொருத்தமானதாகப் பொதுவாக அடையாளம் காணப்படுகிறது; தகவல் தேடல் சொல்லடைவு செய்யப்பட்ட இந்தச் சொற்கள் மூலமாகவோ இந்தச் சொற்களைக் கொண்ட தலைப்பு அடிப்படையிலோ நடைபெறுகிறது. எதிர்காலத்தில் இம்மூலங்களின் அளவெல்லை மற்றும் தகவலின் அளவு அதிகரிக்கும் போது சரியான தகவலை இடங்காண சரியான கலைச்சொல்லைப் பயன்படுத்துவதற்குத் திறனற்ற பயன்பாட்டாளர் கூடுதல் சிக்கலை எதிர்கொள்வர்.

சொல்வலை இயற்கை மொழி ஆய்வுக்கும் உருவாக்கத்திற்கும் இது பல வழிகளில் கைகொடுக்கும். சொல்வலையைப் பயன்படுத்தி இயந்திரமொழிபெயர்ப்பு செய்வதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. சொல்வலையில் உட்படுத்தப்பட்டுள்ள சொல் அறிவு அதைத் திறமையான ஒழுங்கு முறைகள் (expert systems), மொழிபெயர்ப்புத் துணைக்கருவிகள், தேடல் இயந்திரங்கள், கற்றல் ஒழுங்கமைப்புகள் மற்றும் தானியங்கு சுருக்கிகள் (automatic summarizers)

போன்றவற்றிற்குப் பொருத்தமானதாகச் செய்கின்றது.

ஐரோப்பாவில் பல மொழிகள் தகவலை இடம் காண்பதில் சிக்கலை நேரிடுகின்றன. யூரோ சொல்வலை சொல் உறவுகளால் தொடர்புப்படுத்தப்பட்ட சொற்களின் பன்மொழி வலையமைப்பைத் தருகிறது. இது தகவல் தேடலில் பயன்படுத்தப்படும் பயன்பாட்டாளரால் தரப்படும் சொற்களிலிருந்து பிற சொற்களைக் கண்டுக்கொள்ளத் தேடல் கருவியைத் தருகிறது. இது குறிப்பாகச் சொற்றொகுதியின் போதிய அறிவு இல்லாத இரண்டாவது மொழியில் பணி செய்யும் பயன்பாட்டாளர்களுக்குப் பயன்படும். இந்தச் சொல்வலை பிற பயன்பாடுகளுக்கு ஆதரவாக இருக்கும் ஒரு அடிப்படை மூலமாகப் பயன்படுத்தப்படுகிறது. சொல்வலையில் உட்படுத்தப்படும் உள்ளுறையும் பொருண்மை அறிவு வலுவான ஒழுங்குமுறைகள், மொழிபெயர்ப்புக் கருவிகள், மொழி கற்கும் ஒழுங்குமுறைகள் மற்றும் தானியங்கி சுருக்கிகள் ஆகியவற்றின் ஒரு பகுதியாகப் பொருத்தமுறச் செய்கிறது.

யூரோ சொல்வலை போலவே திராவிடமொழிகளின் சொல்வலை (Dravidian wordnet) உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். தமிழுக்கு என்று தனியான ஒரு சொல்வலை உருவாக்கப்படவேண்டும் என்ற குறிக்கோளை நிறைவு செய்யவேண்டுமானால் அதற்குரிய முன்னோடி ஆய்வுகள் தேவை. சொற்பொருண்மையியல் கோட்பாட்டை முழுவதும் அறிந்து கொண்டு பின்னர் அக்கோட்பாட்டை ஒட்டி பல ஆய்வுகளை மேற்கொண்டு தேவையான மூலவளங்களை உருவாக்கியப் பின்தான் தமிழச் சொல்வலை உருவாக்கம் தொடங்கப்படவேண்டும். அடிப்படையாக ஒரு அகராதியும் பொருட்புல அகராதியும் (சொற்களஞ்சியமும்) தேவை. கிரியாவின் தற்காலத் தமிழகராதியும் (சுப்பிரமணியம், 1992) தற்காலத் தமிழ்ச் சொற்களஞ்சியமும் (இராசேந்திரன், 2001) இதைப் பூர்த்தி செய்கின்றன. மேலும் பல சிறப்பு அகராதிகளும் நிகண்டுகளும் தமிழ் மூலப்பொருண்பற்றிய இராசேந்திரனின் நூல்களும் தரவுமைய உருவாக்கத்திற்குப் பயன்படுத்தப்படவேண்டும்.

தமிழ்ச் சொல்வலையில் அடங்கும் சொற்றொகை சொற்கள் பெயர், வினை, பெயரடை, வினையடை போன்ற சொற்பாகுபாடுகளின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுப் பயன்படுத்துவோருக்கு எளிமையான முறையில் சொல் குறித்த தேவையான செய்திகளைப் பெறவேண்டி கணினிமயமாக்கப்பட்டு ஒரு இணையதளச் சொல் தரவுதளமாகத் (online lexical database) தரப்படவேண்டும். தமிழ்ச் சொல்வலை பொருண்மை உறவுகளுக்கும் சொற்களுக்கும் இடையிலான உறவுளுக்கும் முக்கியத்துவம் தரவேண்டும். பெயர், வினை, பெயரடை, வினையடை போன்ற வகைபாடுகளில் அடங்கும் சொற்களுக்கு இடையே உள்ள பொருண்மை உறவுகளை வெளிப்படுத்தும் வகையில் தரவுத்தளம் (database) உருவாக்கப்பட்டு பயன்படுத்துவோர் தேவையான தகவல்களைப் பெறும்படி ஒரு "முன் முகப்பு" உருவாக்கப்பட வேண்டும்.

சொற்பொருண்மையியல் கணிப்பொறியியலுடன் உள்ள தற்போதைய தொடர்புகாரணமாகக் கணினிச் சொற்பொருண்மையியல் என்ற புதிய ஆய்வுக்களமாக மலர்ந்துள்ளது. சொற்பொருண்மையியல் கணினிமொழியியலில் பெரிய ஆய்வுக் களமாக மாறிவருகின்றது. இத்தகைய கணினிமொழியியல் கோட்பாடுகள் அடிப்படையில் அமைவதுதான் சொல்வலை.

தமிழ்ச் சொற்களில் பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள், பெயரடைச்சொற்கள், வினையடைச்சொற்கள் ஆகியவை அடங்குகின்றன. பெயரும் வினையும் தலைமை இலக்கணக்கூறுகள் என்றும் பெயரடையும் வினையடையும் துணைம இலக்கணக்கூறுகள் என்றும் அழைக்கப்படுகின்றன. இச்சொற்களை ஒருபொருள் பன்மொழியக்குழுமங்களாகப் பகுத்து அவற்றிற்கு இடையில் வரும் சொல் மற்றும் பொருண்மை உறவுகள் வெளிப்படும் வண்ணமும் அவற்றின் பல்பொருண்மை வெளிவரும் வண்ணமும் அமைத்துப் பயன்படுத்துவோருக்குச் சொல் குறித்த தேவையான செய்திகளை எளிதாகப் பெற ஒரு மென்பொருளின் மாதிரி உருவாக்கப்படவேண்டும்.

தமிழ்சொற்களைப் பொருண்மைக் களங்களாகப் பகுத்து அவற்றில் வரும் சொற்களைப் பொருண்மை உறவுகளால் தொடர்புபடுத்துவது கடினமான செயல்பாடு. இத்தகைய முயற்சி மேற்கொள்ளப்படவேண்டும். இது ஒரு முழுமையான தமிழ்ச்சொல்வலை உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமையும். பல்வேறு மொழியியல் அறிஞர்கள் உருவாக்கிய பொருண்மையியல் கோட்பாடு அடிப்படையில் உருவாக்கப்பட்ட இராசேந்திரனின் (இராசேந்திரன், 2001) தற்காலத் தமிழ்ச் சொற்களஞ்சியத்தில் பட்டியலிடப்பட்டுள்ள பெயர், வினை, பெயரடை, வினையடைச் சொற்கள் சொல்வலைக்கு ஏற்பத் தரவுதளமாக மாற்றப்படவேண்டும். இச்சொல்வலை தேவையான மென்பொருள்களைப் பயன்படுத்தி ஒரு மீளப்பெறும் ஒழுங்குமுறையாக உருவாக்கப்படவேண்டும்.

தமிழ்ச் சொல்வலை ஒரு சொல் தரவு மையம் (Lexical database). இதன் முக்கியமான பண்பு அதன் அர்த்தங்களின் வலைப்பின்னல். சொற்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையை அளந்து சொற்பொருள் மயக்கம் தீர்க்கச் சொல்வலை பயன்படுகின்றது. சொல்வலையைப் பயன்படுத்தி படிநிலை அமைப்பில் தரப்பட்டுள்ள இரு சொற்களுக்கு இடையே உள்ள பொருண்மை உறவை ஆய்ந்து அச்சொற்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையை அளக்கலாம். பொருண்மை மயக்கம் தவிர மீட்புச்செயல்பாடுகளுக்கும் சொல்வலை பயன்படுகின்றது. தகவல் தளங்களிலும் தகவல் மையங்களிலும் இருந்து பயன்படுத்துபரின் கேள்வியால் தேவையான தகவல்களைப் பெற இயலும். சொல்வலை

இதற்குப் பெரிதும் உதவும். இயற்கை மொழி ஆய்வுக்கும் உருவாக்கத்திற்கும் இது பல வழிகளில் கைகொடுக்கும். சொல்வலையைப் பயன்படுத்தி இயந்திரமொழிபெயர்ப்பு செய்வதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. சொல்வலையில் உட்படுத்தப்பட்டுள்ள சொல் அறிவு அதைத் திறமையான ஒழுங்குமுறைகள் (expert systems), மொழிபெயாப்புத் துணைக்கருவிகள், தேடல் இயந்திரங்கள், கற்றல் ஒழுங்கமைப்புகள் மற்றும் தானியங்கு சுருக்கிகள் (automatic summarizers) பேன்றவற்றிற்குப் பொருத்தமானதாகச் செய்கின்றது. யூரோ சொல்வலை போலவே திராவிடமொழிகளின் சொல்வலை (Dravidian wordnet) உருவாக்குவதற்கான முயற்சிகள் தொடங்கப்படவேண்டும். தமிழ்ச் சொல்வலையின் மாதிரிதான் உருவாக்கப்பட்டுள்ளது. முழுச்சொல்வலை உருவாக்கப்படவில்லை. தற்போது மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் நிதி உதவியுடன் தமிழ்ப் பல்கலைக்கழக மொழியியல் துறையில் நடைபெற்ற திராவிடமொழிகளின் சொல்வலைகள் என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக அமையும் தமிழ்ச்சொல்வலை உருவாக்கத்திற்கு இது முன்னோடியாக அமையும்.

இந்திய மொழிகளின் தொழில் நுட்பவளர்ச்சி (Technological Development Indian Languages) இணயதளத்தில் இந்தோ சொல்வலையின் ஒருபகுதியான தமிழ் சொல்வலையை பற்றிய விளக்கங்களையும் பயன்படுத்துவர் இடைமுகம் மூலம் சொல்வலைத் தகவல்களையும் பெறலாம்.

துணைநூல்கள்

- இராசேந்திரன் ச. 1991. "தற்காலத் தமிழ்ச் சொற்களஞ்சியம்" (பாகம்1) தமிழ்க் கலை 9.1- 4:55-76.
- இராசேந்திரன் ச 1999. "பொருட்புல வகைப்பாடும் சொற்களஞ்சியமும்". புலமை 25.2:47-66
- இராசேந்திரன் ச 2001. "தற்காலத் தமிழ்ச்சொற்களஞ்சியம்". தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.
- இராசேந்திரன் ச 2006. தமிழ்ச் சொல்வலை. ஆய்வுமுகங்கள். எச். சித்திரபுத்திரன் மற்றும் பிறர் (பதிப்பு). ஆசிரியர் பேரவை. தமிழ்ப் பல்கலைக்கழகம். தஞ்சாவூர், 2006, 105-117.
- இராசேந்திரன், ச. மற்றும் பாஸ்கரன், ச. 2006. "தமிழ் மின்சொற்களஞ்சியம்", தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.
- இராசேந்திரன், ச. மற்றும் அனிதா, க. 2019. தமிழ்ச் சொற்றொகையின் மூலப்பொருண்மையியல் ஆய்வு (Ontology of Tamil Vocabulary) Language in India www.languageinindia.com ISSN 1930-2940 Vol. 19:8 August 2019.
- இராசேந்திரன், ச. மற்றும் பாஸ்கரன், ச. 2006. "தமிழ் மின்சொற்களஞ்சியம்", தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.
- இராசேந்திரன் ச. 2021 சொல்வலையும் அதன் பரிமாணங்களும் (WordNet and its dimensions). Language in India www.languageinindia.com ISSN 1930-2940 Vol. 21:3 March 2021
- Rajendran. S, 2009. Dravidian WordNet. In: Proceedings of Tamil Internet Conference 2009. Cologne, Germany, October, 2009
- சக்திவேல், சு மற்றும் ச. இராசேந்திரன். 1994. சொற்கள் வாழ்வும் வரலாறும் [Words: Life and History]. மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- Miller, G.A. 1991. "Science of Words". New York: Scientific American Library.
- Miller, G.A.1990. "Nouns in WordNet:a lexical inheritance system". International Journal of Lexicography Vol 3, No. 4, 245-264.
- Miller G.A. , R. Beckwith, C. Fellbaum, D. Gross, K.J. Miller. 1990. "Introduction to WordNet: An On-line Lexical Database." International Journal of Lexicography, Vol 3, No.4, 235-244.
- Miller, K.J. 1998. "Modifiers in WordNet". In: Fellbaum, C. (ed.). 1998. WordNet: "An Electronic Lexical Database". Cambridge: MIT Press.
- Nair, Nandu C. Rajendran S, Batsure, K. Alighing IndoWordNet with the Princeton WordNet. Down loaded in 2019.
- Rajendran, S. 2002. "Preliminaries to the preparation of Wordnet for Tamil." Language in India 2:1, March 2002, www.languageinindia.com
- Rajendran, S. 2009. "Dravidian WordNet." In: Proceedings of Tamil Internet Conference 2009. Cologne, Germany, October, 2009
- Rajendran, S. 2010. "Tamil WordNet." In: Proceedings of the Global WordNet Conference (GWC 10) 2010, IIT, Bombay.
- Rajendran, S. 2016. "Tamil Thesaurus to WordNet." In: Conference Papers of 15th Tamil Internet Conference 2016. International Forum for Information Technology in Tamil, September 2016, 1-9.
- Rajendran. S, 2010. Tamil WordNet. In: Proceedings of the Global WordNet Conference (GWC 10) 2010, IIT, Bombay
- Rajendran S. & Anandkumar, M. 2017 Visual Onto-thesaurus for Tamil. Language in India www.languageinindia.com ISSN 1930-2940 Vol. 17:5 May 2017
- Rajendran, S., S. Arulmozi, B. Kumara Shanmugam, S. Baskaran, and S. Thiagarajan. 2002. "Tamil WordNet." In: Proceedings of the First International Global WordNet Conference. Mysore: CIIL, 271-274.
- Rajendran,S., Shivapratap G, Dhanalakshmi V and Soman K.P. 2010. "Building a WordNet for Dravidian Languages." In: Proceedings of the Global WordNet Conference (GWC 10), 2010 IIT Bombay
- Vossen, Piek . 1998. Introduction to EuroWordNet. In EuroWordNet: A multilingual database with lexical semantic networks, pages 1-17. Springer.
- Vossen, Piek (eds). 1998. Special Issue on EuroWordNet. Computers and the Humanities, Vol 32, Nos. 2-3, 91-115.
- Vossen P. (eds.) 1999 "EuroWordNet: a multilingual database with lexical semantic networks for European Languages". Dordrecht: Kluwer Academic Publishers.
- Vossen P. 1999 fc., "EuroWordNet as a multilingual database". In: Wolfgang Teubert (ed). Berlin: Mouton Gruyter.

NATURAL LANGUAGE PROCESSING FOR TAMIL

Zero-shot Response generation in Chatbots

Sobha Lalitha Devi and Pattabhi RK Rao

ABSTRACT

Response generation is one of the main components in conversational AI. This task involves “understanding" natural language input provided by the user to give an appropriate response in a natural, fluent way as human’s converse, for instance back and forth dialogues. The emergence of large-scale dialogue datasets availability in English has greatly helped in advancing the research of dialog in English and few European languages. In the Indian languages there are no such datasets available. In this work we have created a small Tamil dialogue dataset in general domain. This dataset has 50 conversations between two speakers. In this work a zero-shot algorithm which uses a capsule-based model, as described by Xia (Xia et.al. 2018) is developed for response generation. A F1-accuracy score of 82.13% is obtained which is comparable with the state of the art.

Sobha Lalitha Devi and Pattabhi RK Rao

AU-KBC Research Centre, MIT Campus of Anna University,

Chromepet, Chennai, India.

sobha@au-kbc.org

pattabhi@au-kbc.org

1. INTRODUCTION

Response generation is one of the main components in conversational AI. This task involves “understanding" natural language input provided by the user to give an appropriate response in a natural, fluent way as human’s converse, for instance back and forth dialogues. The creation of high-quality natural language responses for chatbots remains a challenging and time-consuming task that often depends on high-quality training data and deep domain knowledge. Therefore, it is essential to engage experts in the chatbot response development process which have the required domain knowledge. But having a high knowledge human expert available is difficult and expensive. It is essential that automatic or semi-automatic methods for response generation are devised. The success of neural models and the emergence of large-scale dialogue datasets availability in English have greatly helped in advancing the research of dialog generation (Serban et al., 2016, 2017; Huang et al., 2020; Meng et al., 2020) in English and few European languages. In the Indian languages there are no such datasets available. Hence it is important to use methods which can work on limited datasets or practically no annotated datasets.

The paper is further organized as follows: Section 2 describes state of the art in this area of research. Section 3 describes the present work which also includes description of data creation. In section 4, experiments and results are discussed. The paper concludes with section 5.

2. RELATED WORK

Advancements and accessibility of high-end hardware infrastructure has helped researchers use artificial neural network algorithms with success to develop neural models such as BERT, Large Language Models (LLMs). In languages such as English and few European languages emergence of large-scale datasets have greatly advanced the research of conversational AI. The open-domain chatbot systems generate more informative and fluent responses (Ke et al., 2018; Zhang et al., 2020b; Bao et al., 2020; Meng et al., 2021), for general conversations and for domain specific applications such as providing emotional companionship and social chatbots.

Vokaturi, your personal voice alchemist, lets you morph and mix audio like magic. Its AI engine seamlessly blends voices, creates realistic deepfakes, and even extracts emotions from sound. Craft unique narrations, build expressive chatbots, or simply have fun experimenting – Vokaturi puts the power of voice manipulation in your hands.

Technical details: HMM-based synthesis, flexible and customizable architecture, multiple dialects support.

Strengths: Technical knowledge empowers customization, suitable for research and development purposes.

Weaknesses: Less natural speech quality compared to other systems may require deeper technical understanding.

Table I. Comparison of various TTS systems

Feature	GTTS[4]	MA TTS[3]	Resemble.ai[6]	Vokaturi [5]
Architecture	Neural network	Deep neural network	Deep learning & VAE	HMM
Speech quality	High	High	Highly natural & expressive	Less natural
Customization	Limited	High	Advanced	Flexible
Cost	Free (basic)	Pay-per-use	Expensive	Free (open-source)
Target users	General users, developers	Researchers, developers, advanced users	Content creators, media professionals	Developers, researchers

IV. ADVANCEMENTS IN TAMIL LANGUAGE TECHNOLOGY

The field of Tamil language technology has witnessed significant advancements in recent years, thanks to the continuous efforts of researchers, developers, and language enthusiasts. These advancements have contributed to the improvement of Tamil text-to-speech systems and other language-related technologies.

One notable advancement is the integration of deep learning techniques into text-to-speech systems. Deep learning models, such as recurrent neural networks and convolutional neural networks, have shown promising results in enhancing the naturalness and intelligibility of generated speech. By leveraging these techniques, developers have been able to create more realistic and human-like Tamil text-to-speech systems.

Another area of advancement is the development of domain-specific text-to-speech systems. These systems are designed to cater to specific domains or industries, such as healthcare, finance, or legal. By fine-tuning the models with domain-specific data, developers can improve the accuracy and quality of speech output in specialized contexts.

Furthermore, advancements in data collection and processing have led to the creation of larger and more diverse datasets for training text-to-speech models. These datasets include a wide range of Tamil texts, ensuring better coverage of various linguistic aspects. With access to more extensive and representative datasets, developers can create more robust and accurate text-to-speech systems.

V. CHALLENGES IN DEVELOPING TAMIL TEXT-TO-SPEECH SYSTEMS

While advancements in Tamil language technology are commendable, there are still several challenges that developers face when creating Tamil text-to-speech systems. These challenges can hinder progress and limit the effectiveness of the systems. Some of the key challenges include:

Limited resources and funding: Developing high-quality text-to-speech systems requires substantial resources and funding. However, the availability of such resources is often limited, hindering the development of advanced systems.

Linguistic complexities: Tamil, like any other language, poses certain linguistic complexities that make it challenging to develop accurate text-to-speech systems. Tamil's rich morphology, complex grammar, and phonetic variations require careful modelling and handling.

Contextual understanding: Text-to-speech systems need to understand the context in which the text is being spoken to ensure appropriate pronunciation and intonation. Incorporating contextual understanding into the systems remains a challenge, particularly for complex or ambiguous sentences.

Voice variety and customization: Users often have diverse preferences when it comes to voices. Incorporating voice variety and customization options in text-to-speech systems can be challenging due to limited resources and technical constraints.

Overcoming these challenges requires collaborative efforts from researchers, developers, and stakeholders, along with increased support and investment in Tamil language technology.

VI. PROMOTING AWARENESS AND ADOPTION OF TAMIL TEXT-TO-SPEECH SYSTEMS

Creating awareness and promoting the adoption of Tamil text-to-speech systems is essential for maximizing their impact and ensuring widespread accessibility. Here are some strategies to promote awareness and encourage the use of these systems:

Education and outreach programs: Organize workshops, seminars, and training sessions to educate individuals about the benefits and applications of Tamil text-to-speech systems. These programs can target schools, universities, libraries, and organizations working with visually impaired individuals.

Collaboration with content creators: Collaborate with content creators, such as publishers, e-learning platforms, and digital media companies, to integrate Tamil text-to-speech systems into their platforms. This collaboration can help raise awareness among content creators and encourage the adoption of these systems.

User feedback and improvement: Encourage users to provide feedback on their experiences with Tamil text-to-speech systems. This feedback can help developers identify areas for improvement and enhance the overall user experience.

Policy and advocacy: Advocate for policies that promote the integration of Tamil text-to-speech systems in public and private digital platforms. Engage with policymakers, language organizations, and advocacy groups to ensure the inclusion of Tamil language technology in the digital landscape.

By implementing these strategies, we can promote awareness, drive adoption, and foster the growth of Tamil text-to-speech systems, ultimately enhancing language accessibility for Tamil speakers.

VII. FUTURE PROSPECTS AND DEVELOPMENTS IN TAMIL LANGUAGE TECHNOLOGY

The future of Tamil language technology looks promising, with several exciting developments on the horizon. Some potential areas of growth and advancement include:

Voice customization: Future developments may focus on enhancing voice customization capabilities, allowing users to create personalized voices based on their preferences and requirements.

Emotion and expression: Integrating emotion and expression into text-to-speech systems can add a new dimension to speech synthesis. Future systems may incorporate emotional cues and variations to make the generated speech more engaging and expressive.

Real-time applications: Real-time text-to-speech systems can enable live translation, transcription, and voice assistance in various domains, including education, customer support, and healthcare. Future developments may explore real-time applications to facilitate seamless communication and accessibility.

Multilingual support: Expanding the capabilities of Tamil text-to-speech systems to support multiple languages can enhance their versatility and usefulness. Future developments may aim to integrate multilingual capabilities, enabling users to switch between different languages seamlessly.

The future of Tamil language technology relies on constant innovation, collaboration, and support from various stakeholders. By embracing these developments, we can unlock the full potential of Tamil text-to-speech systems and revolutionize language accessibility for Tamil speakers.

VIII. CONCLUSION

In conclusion, Tamil text-to-speech systems play a vital role in promoting language accessibility, inclusivity, and cultural heritage. By reviewing and comparing various systems, we gain insights into their strengths,

weaknesses, and potential areas of improvement. The advancements in Tamil language technology, coupled with the challenges faced in developing text-to-speech systems, highlight the need for continuous collaboration and support. Promoting awareness and adoption of Tamil text-to-speech systems is crucial for maximizing their impact. By educating individuals, collaborating with content creators, and advocating for policies, we can ensure the integration of these systems into the digital landscape. The future of Tamil language technology holds immense potential for voice customization, real-time applications, and multilingual support. By embracing these prospects and fostering innovation, we can create a future where language accessibility knows no boundaries. Let's continue to push the boundaries of Tamil language technology and unlock a world of possibilities for Tamil speakers worldwide.

REFERENCES

[1] Jayakumari, J., & Jalin, A. F. (2019, June). An Improved Text to Speech Technique for Tamil Language Using Hidden Markov Model. 2019 7th International Conference on Smart Computing & Communications (ICSCC). https://doi.org/10.1109/icscc.2019.8843683

[2] Rajeswari, K. C., & UmaMaheswari, P. (2014, December). A novel intonation model to improve the quality of tamil text-to-speech synthesis system. In 2014 Sixth International Conference on Advanced Computing (ICoAC) (pp. 722-727). IEEE. https://doi.org/10.1109/ICoAC.2014.7229737

[3] https://azure.microsoft.com/en-us/products/ai-services/speech-translation

[4] https://gtts.readthedocs.io/en/latest/

[5] https://vokaturi.com/

[6] https://www.resemble.ai/

[7] H. A. Patil et al., "A syllable-based framework for unit selection synthesis in 13 Indian languages," 2013 International Conference Oriental COCOSDA held jointly with 2013 Conference on Asian Spoken Language Research and Evaluation (O-COCOSDA/CASLRE), Gurgaon, India, 2013, pp. 1-8, doi: 10.1109/ICSDA.2013.6709851.

[8] D. S. S. De Zoysa, J. M. Sampath, E. M. P. De Seram, D. M. I. D. Dissanayake, L. Wijerathna and S. Thelijjagoda, "Project Bhashitha - Mobile Based Optical Character Recognition and Text-to-Speech System," 2018 13th International Conference on Computer Science & Education (ICCSE), Colombo, Sri Lanka, 2018, pp. 1-5, doi: 10.1109/ICCSE.2018.8468858.

[9] A. F. Jalin and J. Jayakumari, "Text to speech synthesis system for tamil using HMM," 2017 IEEE International Conference on Circuits and Systems (ICCS), Thiruvananthapuram, India, 2017, pp. 447-451, doi: 10.1109/ICCS1.2017.8326040.

[10] M. Karthikadevi and K. G. Srinivasagan, "The development of syllable based text to speech system for Tamil language," 2014 International Conference on Recent Trends in Information Technology, Chennai, India, 2014, pp. 1-6, doi: 10.1109/ICRTIT.2014.6996126.

TAMIL INFORMATION RETRIEVAL AND TEXT MINING

தமிழ்க் கணினி ஆய்வுகள்: சவால்களும் எதிர்காலமும்

வாசு அரங்கநாதன்

ஆய்வுச்சுருக்கம்

தமிழ்க் கணினி ஆய்வு என்பதைத் தமிழின் பல ஆய்வுகளோடு ஒப்பிட்டு எவ்வகையிலெல்லாம் கணினி கொண்டு அவ்வாய்வுகளுக்குப் புதிய கண்ணோட்டத்தைக் கொடுக்கலாம் என்று சிந்திக்க வேண்டிய நிலை. தமிழியல் என்பதை இக்காலகட்டத்தில் தமிழ்க் கணினியியல் எனக் கூற வேண்டியிருக்கிறது. ஏனெனில் பெரும்பாலான தமிழ் ஆய்வுகளைக் கணினி கொண்டு ஆய்வு செய்ய வேண்டிய கட்டாய நிலையில் இருக்கிறோம். இலக்கிய ஆய்வு, கல்வெட்டியல், அகழாய்வு, தமிழ்க் கற்றல் மற்றும் கற்பித்தல், மொழியியல் போன்ற ஆய்வுகளைக் கணினி இன்றி செய்ய இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். மொழியியல் ஆய்வைக் கணினி மொழியியல் ஆய்வு (computational linguistics) எனவும் கணினி நுண்திறன் ஆய்வு (artificial intelligence/natural language processing) எனவும் இருவேறாகப் பிரித்திருக்கின்றனர். முன்னது கணினி கொண்டு வட்டார வழக்கு ஆய்வு, சமூக மொழியியல் ஆய்வு போன்ற ஆய்வுகளை மேம்படுத்துவது. பின்னது கணினிக்கு மொழித் திறனைக் கொடுத்து மனிதன் செய்யும் மொழிப் பயன்பாடுகளைச் கணினியைச் செய்ய வைப்பது. இப்பிரிவில் உரையைப் புரிந்துகொள்ளும் திறன், உரையிலிருந்து பேச்சு, பேச்சிலிருந்து உரை, மொழிபெயர்ப்பு போன்ற மொழித் திறன்களைக் கணினிக்குக் கொடுப்பது அடங்கும். ஆனால் இலக்கிய ஆய்வு, கல்வெட்டியல் ஆய்வு, அகழாய்வு, தமிழ்க் கற்றல் மற்றும் கற்பித்தல் ஆகிய ஆய்வுகளில் இத்துறைகளை எப்படியெல்லாம் கணினி கொண்டு மேம்படுத்தலாம் என்று காணும் சூழல். இத்துறைகளைக் கணினி கொண்டு ஆய்வு செய்யும் புதிய அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்காவிட்டால் நமது ஆய்வு மேம்படவில்லை எனவே கூற வேண்டிய சூழலில் இருக்கிறோம். எடுத்துக்காட்டாகக் கணினி கொண்டு இலக்கியத் தரவுகளை ஆய்வு செய்யும் முயற்சியின் வழித் தமிழ் மொழியில் கொண்டிரு, விடு, கொள் போன்ற உருபுகள் எவ்வாறு இடைக்காலத்தில் உருவாகின என்பது, “வரல் ஆகும்” என்றிருந்த வழக்கு எப்படி “வரலாம்” என ஆயிற்று, “அகன்றிசின்” என்பது எப்படி “ஆன்றிசின்” என மாறியது போன்ற பல செய்திகளை நுணுக்கமாக அறியும் முறையை அறியலாம். சங்ககாலத்தில் இல்லாத இவ்வுருபுகள் இடைக்காலத்தில் எவ்வாறு ஏற்பட்டன என்னும் செய்தியைப் படிப்படியாகத் தமிழ் மொழியின் வரலாற்றடிப்படையில் அறிய வேண்டுமெனில் கணினி வழி இலக்கியத் தரவுகளை ஆய்வு செய்யும்போதுதான் அறிய முடியும். (காண்க. ரெங்கநாதன் 2011, 2018, 2023). கணினி கவிதை எழுதுவது, கதைகளை எழுதுவது போன்ற திறனை இக்காலக் கணினி நுண்திறன் ஆய்வில் செய்திருந்தாலும் இவ்வகை முயற்சிகளில் மனிதனின் இலக்கிய உருவாக்கத் திறனுக்கு இயந்திரம் ஈடுகொடுக்க இயலாத நிலையில்தான் இருக்கிறது எனலாம்.

வாசு அரங்கநாதன்
பென்சில்வேனியாப் பல்கலைக் கழகம், அமெரிக்கா.
Email: vasur@sas.upenn.edu

முன்னுரை:

இக்கட்டுரையில் கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாகப் பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத்தில் நாங்கள் ஈடுபட்ட கணினித் தமிழ் ஆய்வு பற்றி விளக்கி எதிர்காலத்தில் முறையாக எது போன்ற கணினித் தமிழ் ஆய்வில் நாம் ஈடுபட வேண்டும் என்பதை இங்கு விளக்க முற்படுகிறோம். இக்கட்டுரையில் முதலாவதாக தமிழ்க் கற்றல் மற்றும் கற்பித்தல் துறையில் கணினியை எவ்வாறெல்லாம் பயன்படுத்தி வருகிறோம் என்பது பற்றிய விரிவான விளக்கத்தை அளித்து அதற்கான இணையப் பக்கங்களையும் விளக்க முற்படுகிறோம். இரண்டாவதாகத் தமிழ் இலக்கிய ஆய்வுக்கென நாங்கள் ஏற்படுத்தியிருக்கும் இணையப்பக்கங்களை விளக்கி அவற்றின் அடுத்தக் கட்ட ஆய்வுகள் பற்றியும் விளக்க முற்படுகிறோம். மூன்றாவதாகக் கணினி நுண்திறன் ஆய்வு என்னும் பிரிவின் கீழ் மனித இயந்திரம் உருவாக்கும் எங்களது ஆய்வை விளக்கி மனித இயந்திரத்தோடு தமிழில் உரையாடும் வழிமுறைகளையும் விளக்குகிறோம். [1]

1. கணினி வழித் தமிழ் கற்றலும் கற்பித்தலும்

வம்சாவளியினரின் பயன்பாட்டுக்கேற்ப கணினி வழித் தமிழ்க் கற்றலும் கற்பித்தலுக்குமான இணையப் பக்கம் மிகவும் முக்கியம் இக்காலக்கட்டத்தில். இந்நோக்கத்தில் எண்ணற்றப் பக்கங்கள் இருக்கின்றன. இருப்பினும் இரண்டாம் மொழியாகத் தமிழ் மொழியைக் கற்கும் மற்றும் கற்பிக்கும் நோக்கில் இதற்கான இணையப் பக்கத்தை ஏற்படுத்துவதில் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இவ்வழியில் அமைக்கப்பட்ட பின்வரும் இணையத் தளங்களைப் பற்றி இப்பகுதியில் காண்போம்.

http://tamilverb.com

http://learn.tamilnlp.com

இவ்விரண்டு இணையப் பக்கங்களும் பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத்தின் தெற்காசியத் துறையில் செய்யப்பட்ட ஆய்வின் அடிப்படையில் உருவாக்கப்பட்டன. முதல் பக்கம் மொழிச் சூழலும் மொழிக்கற்றலும் என்ற கருத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. இரண்டாவது பக்கம் பேராசிரியர் ஷிப்மன் மற்றும் வாசு அரங்கநாதன் அவர்கள் ஈடுபட்ட தமிழ் வினைகள் பற்றிய ஆய்வின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது.

1.1. மொழிச்சூழலும் மொழிக் கற்றலும்

மொழிச்சூழல் (language in context) என்பதைப் பல கோணங்களில் விளக்கலாம். மொழியைக் கற்பது என்பது மொழியின் இலக்கணம் மற்றும் சொற்களைப் பற்றி அறிவதோடன்றி அவை பேச்சுச் சூழலில் எங்கனம் பயன்படுத்தப்படுகிறது என்பதை அறிவதும் ஆகும். "நீங்களும் வந்துவிட்டீர்களா?" என்னும் வினாவை இலக்கண அடிப்படையில் அறிந்து கொண்டால் மட்டும் இத்தொடரை எல்லா மொழிச் சூழலிலும் பயன்படுத்த முடியும் என்பதாகிவிடாது. ஒவ்வொரு சூழலுக்கும் ஒவ்வொருவிதமாக இத்தொடரைப் புரிந்துகொள்ளலாம்.[2] இந்த வகையில் "விடு" என்ற விகுதியின் பல்வேறு பயன்பாடுகளை அதைப் பயன்படுத்தும் சூழல்கள் மூலம்தான் நன்கு அறிய முடியும். என்னென்ன சூழலில் எப்படியெல்லாம் இந்த விகுதியைப் பயன்படுத்தலாம் என்பதை அறுதியிட்டும் கூறிவிடமுடியாது. மொழியை முதல் மொழியாக அறிந்தவர்கள் இவ்வகை பொருள் நுண்மைகளை பல சூழல்களில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு இவ்விகுதிகள் குறித்தான பயன்பாட்டை நன்கு அறிந்துகொள்கின்றனர். இத்தகைய பொருள் நுண்மைகளை எங்கனம் இரண்டாம் மொழியாகத் தமிழ் மொழியைக் கற்கும் மாணவர்களுக்குக் கொடுக்க முடியும்? முதல் மொழியாக ஒருவர் மொழியை எங்கனம் கற்றுக்கொண்டாரோ அதே சூழலை மொழி கற்றல் முறையில் கொடுப்பதே பயன்பாட்டு அடிப்படையில் மொழிக் கற்பித்தல் என்பது.

1. இக்கட்டுரையை தமிழக அரசின் தமிழ்க் கணினி மாநாடு 2023ல் படைக்க வாய்ப்பு கொடுத்த தமிழக அரசுக்கும், தமிழ் இணையக் கல்விக்கழகத்துக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருபது ஆண்டு கால தமிழ்க் கணினி ஆய்வுக்கு எனக்குப் பல ஆதரவுகளையும் தொடர்ந்து நல்கிவரும் பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத்தின் தெற்காசியத் துறைக்கும் எனது நன்றியை இங்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

2. "விடு" என்னும் விகுதியின் பயனைச் சூழலின் அடிப்படையில் காண்க: http://learn.tamilnlp.com/unit_07/section_A/lesson02.html

மாணவர்களிடையே மொழிச் சூழல்கள் பலவற்றைக் கொடுத்து மொழியைச் சரியாகப் பயன்படுத்தும் திறமையை வளர்க்கச் செய்ய வேண்டும். இதையும் இலக்கண அடிப்படையிலான மொழிக்கற்றல் முறை என விவாதிக்கலாம்! ஆனால் இலக்கணம் பற்றி நிறைய சிந்தனை இல்லாமலே மொழியைச் சூழலுக்கு ஏற்றவாறு கற்பித்தல் பயன்பாட்டு முறை மொழிக்கற்பித்தலின் சிறப்பு அம்சம் எனலாம்.

1.2. இலக்கண அடிப்படையிலான மொழிக் கற்பித்தலின் சிக்கல்கள்

மொழிக்கற்றல் துறையின் ஆரம்பகாலங்களில் கட்டமைப்பு மொழியியல் கோட்பாடுகள் (structural linguistics) பலவற்றையே பயன்படுத்திவந்தனர். இதனால் பல மொழியாசிரியர்கள் மொழியியல் கோட்பாடுகளைப் பயன்படுத்தியே மொழி கற்பிக்கும் வகையை அறிந்தனர். இதனால் மாணவர்கள் மொழியைக் கற்கும் போது பெரும்பாலும் இலக்கணத்தையே கற்றுக்கொண்டனர். இதன் பின்விளைவு மாணவர்களால் மொழியை முதல் மொழியாகப் பேசுபவர்கள் போன்ற திறமையைப் பெற முடியவில்லை! மேலும் தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் இன்னமும் செம்மொழி இலக்கணத்தையும் இலக்கியத்தையும் கற்பிப்பதே முதன்மையாக இருத்தல் வேண்டும் என்பதில் சிலர் கவனமாக இருக்கின்றனர். தமிழ் இலக்கியம் கற்பிப்பது என்பது வேறு தமிழ் மொழி கற்பிப்பது என்பது வேறு. இலக்கியம் மூலமாகத் தமிழ் மொழியைக் கற்பித்தல் வேண்டும் என்பதும் சிலரின் கருத்து. அதோடு மொழியாசிரியர்களுக்கு செயல்பாட்டு அடிப்படையிலும் (performance based approach), சூழல் அடிப்படையிலும் (context based approach), உரையாடல்கள் அடிப்படையிலும் (communicative approach), தேவை அடிப்படையிலும் (task based approach) மொழியை எவ்வாறு கற்பிப்பது என்பது போன்ற பயிற்சிகள் போதுமான அளவில் கிடைக்காமல் போய்விட்டது. இவ்வகைகளில் தமிழ் மொழியைக் கற்பிப்பதற்கான பயிற்சி நூற்கள் பல இல்லாதது தமிழ் மொழிக் கற்றல் முறைகளில் போதுமான மாற்றங்களை ஏற்படுத்த இயலாத நிலை! சூழல்கள் அடிப்படையில் தமிழ் கற்பதற்காக உருவாக்கப்பட்ட நூலை ரெங்கநாதன் 2011ல் காணலாம்.

1.3. புலம்பெயர்ந்த தமிழ் மாணவர்களின் தமிழ் மொழித் தேவைகள்

புலம்பெயர்ந்த தமிழ் வம்சாவளி மாணவர்களுக்கான மொழித்தேவை என்ன என்பதை ஆய்ந்தால் அவர்கள் தங்களின் மொழிக்கற்றல் சூழல் அடிப்படையில் பல்வேறு வகையான தமிழ் மொழித்திறமையைப் பெற்றுள்ளார்கள் என்பதை அறியலாம். அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் தமிழ் பயிலும் மாணவர்களைப் பொறுத்த வரையில் கொஞ்சம் கூட தமிழ் தெரியாமல் வருபவர்கள் முதல் நன்கு பேசும் திறமைப் பெற்று வரும் மாணவர்கள் வரை இம்மாணவர்களைப் பல வகையில் பிரிக்கலாம். இருப்பினும் மிகக் குறைந்த தமிழ் மாணவர்களே தங்களின் பெற்றோர்கள் மூலமும், தொலைக்காட்சி, திரைப்படம் போன்றவை மூலமும் தமிழை நன்கு புரிந்து கொண்டு பேசக் கூடிய திறமையைப் பெற்றவர்களாக இருக்கிறார்கள். பெரும்பாலான மாணவர்கள் தமிழை நன்கு புரிந்து கொள்கிறார்கள் ஆனால் அவர்களுக்குப் பேசவும் திறம்பட எழுதவும் இயலாத நிலையில்தான் இருக்கிறார்கள். இவர்களையும் மற்றவர்கள் போல் தமிழ் மொழி பேசவும் எழுதவும் செய்ய வேண்டுமெனில் பாடத்திட்டங்களை மேற்கூறிய வகையில் செயல்பாட்டுத்திறனில் அமைப்பதே சிறந்த வழியாகும். இத்தகைய புலம்பெயர்ந்த வம்சாவளி மாணவர்களுக்கு இலக்கண அடிப்படையிலோ வேறு எந்தவித வழக்கமான அடிப்படையிலோ மொழிக் கற்பித்தல் என்பது சரியான விளைவைக் கொடுக்குமா என்பது கேள்விக்குறியே!

சில தமிழ் மாணவர்கள் வீட்டில் பேசும் தமிழைக் கற்றுக் கல்லூரிக்கு வரும் போது அங்கு கற்றுக்கொடுக்கப்படும் இலக்கணம் மற்றும் இலக்கியங்கள் அவர்களுக்குப் புரியாத புதிராகவே இருக்கின்றன. இவற்றைத் தங்களின் வீட்டில் கற்றுக்கொண்ட தமிழறிவோடு இணைத்துப்பார்க்கும் வகை இவர்களுக்கு இயலாமல் போய்விடுகிறது.

தமிழ் வம்சாவளி மாணவர்களுக்குத் தமிழ் உள்ளுணர்வு (Tamil intuition) கிடைக்கச்செய்தல் வேண்டும். இந்த உள்ளுணர்வு என்பது தமிழ் மொழியின் நுண் பொருள்களைப் பற்றிய மற்றும் மொழியை முறையாகப் பயன்படுத்தும் திறமை பற்றிய அறிவாகும். இந்த உள்ளுணர்வு கிடைக்காத பட்சத்தில் அவர்கள் தமிழ் மொழியைப் பள்ளியறிவாகவே காண்பர். மற்றும் மொழிச் சூழலுக்குத் தகுந்தவாறு பேசும் திறமையைப் பெறாதவர்களாவே இவர்கள் இருப்பர். தமிழ் மொழியில் உள்ள பல சிக்கல்களை அவர்கள் அறியாமலும் பயன்படுத்தத் தெரியாமலுமே இருப்பர். உதாரணமாக "நீங்களாவது வாங்கித்தருவதாவது",[3] "வந்தோமா படித்தோமா போனோமா என்று இல்லாமல்..."[4], "வாங்க போங்கங்றீங்க..."[5] போன்ற வழக்குகளை முறையாகப் பயன்படுத்த ஒருவருக்கு இவற்றைப் பற்றிய முழுப் பயன்பாட்டு அறிவு தேவை! மொழிச்சூழல் அடிப்படையிலான இப்பயன்பாடுகளை அறிந்து கொள்வதிலும் பயன்படுத்துவதிலும் அவர்களுக்குச் சிரமமாகவே இருக்கும். இவ்வகையிலான

3. காண்க http://learn.tamilnlp.com/unit_08/section_A/lesson01.htmil
4. காண்க http:// learn.tamilnlp.com/unit_09/section_B/lesson02.html
5. காண்க http:// learn.tamilnlp.com/unit_09/section_A/lesson01.html

பயன்பாடுகளை விளக்கினால் மட்டும் அவர்களுக்கு முழுமையாகப் புரியும் வாய்ப்பு இருக்கும் என்று கூறிவிட முடியாது. மாறாக இவற்றை அவர்கள் இச்சூழல்களில் பயன்படுத்தும் வாய்ப்பு கிடைக்கும் போதுதான் இவற்றின் நுண்பொருள்களும் பயன்பாடுகளும் அவர்களின் உள்ளுணர்வில் பதிய வாய்ப்பிருக்கும். குறிப்பாக இவ்வகை பயன்பாடுகள் மொழியைப் பேசும் போது இயல்பாக அவர்களுக்கு வர வேண்டும் என்பது மிக முக்கியம். இவ்வகைத் திறனை அவர்களுக்கு பள்ளியறிவு மூலமே கொடுத்துவிட முடியுமா என்பது கேள்விக்குரியதே!

தமிழை இரண்டாம் மொழியாகக் கற்போருக்குத் தமிழைப் பயன்படுத்துவதற்கான நல்ல மொழிச்சூழல் ஈடுபாடு (language immersion) கிடைக்காத தருணத்தில் அவ்வகை ஈடுபாட்டை மொழிக்கல்வி வகுப்புகளில் கொடுக்க முனைவதே மொழிப் பயன்பாட்டு உத்தியின் பெரும்பங்காகும்.

1.4. தமிழ் மொழிக் கற்றல் மற்றும் கற்பித்தலில் வேண்டிய மாற்றங்கள்

பெரும்பாலான வம்சாவளி தமிழ் மாணவர்களுக்குத் தமிழைக் கேட்டுப் புரிந்துகொள்ளும் திறன் முழுமைப் பெற்ற நிலையில் இருப்பார்கள். அதாவது எவ்வளவு வேகமாக அவர்களிடம் தமிழில் பேசினாலும் அவர்களால் மிக நன்றாகப் புரிந்து கொள்ளமுடிகின்ற திறன் அவர்களிடம் இருக்கும். இத்தகைய மாணவர்களுக்கு மேற்கூறிய சிறப்பு மொழிப் பண்புகள், வழக்குத் தொடர் மற்றும் பல சிக்கலான அமைப்புகள் பலவற்றைப் புரிந்துகொள்கிற திறன் நன்கு இருக்கும். ஆனால் அவற்றையெல்லாம் தக்க மொழிச் சூழலில் பயன்படுத்தும் திறன் கொஞ்சம் கூட இருக்காது. புரிந்து கொள்ளும் திறன் மற்றும் செயல் திறன் என்னும் இருவகைத் திறனைப் பற்றி மொழிக்கற்பிப்போரின் மனதில் இருக்க வேண்டியிருக்கிறது. அவர்களிடம் இருக்கும் புரிந்துகொள்ளும் திறனைக் கொண்டு அவர்களிடம் இல்லாத செயல் திறனை வளர்க்க வேண்டியதே தமிழ் கற்பிப்போரின் முழுக்கவனத்தில் இருக்க வேண்டும். அவர்களின் புரிந்துகொள்ளும் திறனை முறையாகப் பயன்படுத்தாத எந்த வித பாடத்திட்டமும் அவர்கள் மத்தியில் எடுபடாமல் போய்விட வாய்ப்பிருக்கும். இந்தவகையில் பல மொழிச் சூழல்களைக் காணொளிகள் மூலம் பார்க்கச் செய்து அவ்வுரையாடல்களைக் கேட்கச் செய்து அவ்வுரையாடல்கள் போலவே வகுப்பில் சகமாணவர்களோடு செயற்கைச் சூழலை ஏற்படுத்திப் பயன்படுத்த வைப்பதே இப்பயன்பாட்டு அடிப்படையிலான தமிழ் மொழிக் கற்றல் முறையின் முக்கிய அம்சமாகும். அவர்கள் சில செயற்கைச் சூழலை ஏற்படுத்த வேண்டியிருக்கும். இருப்பினும் அத்தகையச் சூழல்களில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளும் போது தங்களின் கேட்கும் திறனை பேசும் திறனாகக் கொண்டுவர வாய்ப்பிருக்கும்.

மொழிப் பயன்பாடு மற்றும் மொழிச் சூழல்கள் அடிப்படையில் அமைக்கப்பட்ட இணையப் பக்கம் http://learn.tamilnlp.com.

இவ்வகையில் மேற்கூறிய இணையப் பக்கத்தில் எழுபத்திரண்டு மொழிச் சூழல்கள் ஒளிக்காட்சிகளாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வீடு, கடைவீதி, பேருந்து நிலையம், பழக்கடை, காய்கறிக்கடை, துணிக்கடை, சாப்பாடு, உடை போன்ற பல வகையான மொழிச் சூழல்கள் இக்காணொளிகள் வழியாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவை தமிழ்மொழிப் பயன்பாடு பற்றி மட்டுமல்லாமல் தமிழ்ப்பண்பாடு மற்றும் எதார்த்தமான சூழ்நிலைகள் போன்ற விளக்கங்களையும் மனதில் கொண்டு அமைக்கப்பட்டவை! இவ்வொளிக்காட்சிகளும் அவற்றோடு கொடுக்கப்பட்டுள்ள பாடத்திட்டங்களும் பயிற்சிகளும் எளியன முதல் மிகச் சிரமமானவை என ஒரு வரையரைக்குள் கொடுத்துள்ளோம். முதல் ஒளிக்காட்சியைக் காணும் போது அது மிக எளியதான வரவேற்பு மற்றும் ஒருவருக்கொருவர் பழகிக்கொள்ளும் சூழலை விளக்குவதாக இருக்கும். பாடங்கள் தொடரத் தொடர அவை பல சிக்கலான சூழல்களை விளக்குவதாக இருக்கும். வம்சாவளி மாணவர்கள் தங்களின் மொழித் திறமையின் அடிப்படையில் இப்பாட வரிசையில் எந்தப் பாடத்திலிருந்து வேண்டுமானாலும் படிக்கத் தொடங்கலாம். இப்பாடத்திட்டங்களைப் படிக்க வேண்டும் என்று சொல்வதைவிட இவற்றோடு தங்களைப் பழக்கப்படுத்திக்கொள்ளலாம் என்று சொல்வதே மிகப் பொருந்தும். இவ்வகையில் ஒவ்வொரு உரையாடலிலும் வருகிற புது இலக்கண விளக்கங்கள் மற்றும் பண்பாட்டு அடிப்படையிலான விளக்கங்கள் அப்பாடத்திலேயே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும். உதாரணமாக http://learn.tamilnlp.com/unit_02/section_B/lesson01.html என்ற பக்கத்தில் தமிழகப் பண்பாட்டின் விருந்து பற்றிய விளக்கத்தை ஒளிக்காட்சி வாயிலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. விருந்தினராக ஒரு வீட்டுக்குச் செல்லும் போது அவர்களை நிறைய சாப்பிடச் சொல்லும் பழக்கம் தமிழர்களுக்கு உண்டு. அதே சமயத்தில் விருந்தினர்களும் தங்கள் வீட்டில் மனம்போன போக்கில் நிறைய சாப்பிடுவதையும் அவர்கள் விரும்புவதில்லை. இப்படியான சூழலில் தமிழ் மொழி வாக்கியங்கள் மற்றும் சொற்கள் ஆகியனவற்றை எப்படியெல்லாம் பயன்படுத்த வேண்டும் என்ற ஒரு நியதி இருக்கிறது. விருந்தினர் “போதும்! போதும்! வேண்டாம்! வேண்டாம்!” என அடிக்கடி சொல்ல வேண்டும். வீட்டினரோ! “இன்னும் கொஞ்சம்! இன்னும் கொஞ்சம்!” என அடிக்கடி சொல்ல வேண்டும். இப்படியான விருந்து மொழிப்பயன்பாட்டோடு பல்வகையிலும் தொடர்பு கொண்டிருப்பதைக் காணலாம். அமெரிக்கா போன்ற நாடுகளில் பிறந்த தமிழ்க் குழந்தைகளுக்கு இவ்வகையான பழக்கம் இருக்க வாய்ப்பில்லை! அவர்கள் வீட்டிலேயே அமரிக்கப் பண்பாட்டோடு வளர்ந்தவர்கள்! உணவும் உறவும் அவர்களின் விருப்பத்திற்கே விட

வேண்டும் எனும் கொள்கையில் வளர்ந்தவர்கள்! அவர்கள் தமிழகக் குடும்பத்தோடு தமிழகத்தில் கலக்கும் தருணத்தில் விருந்து போன்ற தமிழ்ப்பண்பாட்டை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்! இந்த வகையில் மொழியும் பண்பாடும் தமிழ்ச் சூழலும் பின்னிப் பிணைந்தவாறு கொண்ட பாடத்திட்டங்களை அமைத்துத் தருவது தமிழ்க்கற்பித்தலின் நோக்கமாக இருக்க வேண்டியிருக்கிறது. மேற்கூறிய பாடம் இந்தவகையில் அமைக்கப்பட்டதே! இங்கனமே இவ்விணையப்பக்கத்தில் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு பாடமும் தமிழ்ப்பண்பாடு, தமிழ்மொழிப் பயன்பாடு, மொழிச் சூழல் என்பனவற்றை மையமாகக் கொண்டு கொடுக்கப்பட்டிருக்கும்!

தமிழர்கள் புலம்பெயர்ந்து வேறு நாடுகளில் குடியுரிமைப் பெற்று வாழ்ந்து வருவதன் வரலாற்றை நோக்கும் போது புலம்பெயர்ந்த வம்சாவளி தமிழ் மாணவர்களுக்கான தமிழ்க்கல்விக்காகத் தமிழ் பயிற்றுவோர் அதிகக் கவனம் செலுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தைக் காணலாம். சிங்கப்பூர், மலேசியா, இலங்கை ஆகிய நாடுகளைத் தவிர மற்ற நாடுகளில் வம்சாவளித் தமிழ்க்கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்டாத நிலையைத்தான் காணமுடிகிறது. மொரீஷியஸ், தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகள் மற்றும் சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் கிட்டத்தட்ட தமிழ்நாடு போன்று மொழிச்சூழல் ஈடுபாட்டுக்கான (language immersion) வசதிகள் இருக்கின்றன. ஆனால் அமெரிக்கா, ஐரோப்பா, கனடா போன்ற இடங்களில் இத்தகைய ஈடுபாட்டுக்கான வசதிகள் இல்லை! இத்தகைய ஈடுபாடு இல்லாத பட்சத்தில் தமிழகத்தில் கற்றுக்கொடுக்கப் பயன்படும் தமிழ்ப் பாடத்திட்டங்கள் எந்தவகையிலும் இவ்வகை நாடுகளில் பயன்படுத்த இயலாது. மாறாகத் தமிழ் மாணவர்களுக்குத் தமிழறிவு மட்டுமல்லாமல் தமிழ் உள்ளுணர்வு கொடுக்கும் வகையிலான தமிழ்ப்பாடத்திட்டத்தை வகுக்க வேண்டியதும் மிக அவசியம். முதல் நிலை தொடங்கி பத்தாம் நிலை, பதினொன்றாம் நிலையென தமிழ் வகுப்பைப் பிரித்துத் தமிழ்ப் பாடத்திட்டங்களை வகுக்கும் நிலை மாறி வம்சாவளித் தமிழ் மாணாக்கர்களின் இல்லத்தினின்று பெற்றத் தமிழறிவை மனதில் கொண்டு வெவ்வேறு வகையான பாடத்திட்டத்தை அமைப்பதில் தமிழ்க்கல்வியாளர்கள் கவனம் கொள்ள வேண்டியிருக்கிறது.

வம்சாவளி மாணாக்கர்களுக்கான தமிழறிவு புகட்டலில் இருக்கும் பல வருட அனுபவ அடிப்படையில் அவர்களை வயதை வைத்து வெவ்வேறு நிலைகளில் பிரித்துத் தமிழ்க்கல்வி கொடுக்க இயலாது என்பதை உணர முடிகிறது. இல்லத்தினின்று அவர்கள் பெற்ற தமிழ்க் கல்வியினடிப்படையில் அவர்களைப் பார்க்கும் போது ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு விதமான சூழலில் தமிழறிவு பெற்றிருப்பார்கள் என்பது தெரியவரும். இந்த வகையில் இவர்கள் அனைவரையும் ஒருங்கிணைய நோக்கி அவர்களது மொழியறிவை ஒரே தன்மையானது என கணிக்க இயலாது.

பெரும்பாலான வம்சாவளி மாணவர்களின் தமிழறிவின் தேவையைக் கணிக்கும் போது அவர்களுக்குத் தமிழ் உள்ளுணர்வு கொண்ட பேச்சுத் திறனும் எழுதும் திறனும் புகட்ட வேண்டியது மிக அவசியம் என்பதை அறியலாம். இவ்வகையில் இப்பகுதி மொழிச் செயல்முறைத் திட்டத்தில் எங்கனம் பாடத்திட்டத்தை அமைக்கலாம் என்பதை இதற்காக ஏற்படுத்தப்பட்ட தமிழ் இணையப் பக்கத்தின் அடிப்படையில் விளக்குகிறது. தமிழ் மொழி, மொழிச் சூழல்கள் மற்றும் தமிழ்ப் பண்பாடு ஆகியன ஒருங்கிணைந்த பாடத்திட்டத்தைத் தமிழ் வம்சாவளி மாணவர்களுக்கு அமைக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை இப்பகுதி விளக்குகிறது. tamilverb.com என்னும் இணையத்தளத்தில் ஆங்கில வினைகளின் அடிப்படையில் தமிழ் வினைகளைக் கொடுத்து அவை பயன்படுத்தப்படும் சூழல்களை விளக்கி அவற்றை ஒலிக்கோப்புகள் வழி கேட்கும் வசதியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. வம்சாவளி மாணவர்களில் பெரும்பாலோனோர் தங்களின் ஆங்கில மொழியின் அடிப்படையிலேயே தமிழ் மொழியைக் கற்பார்கள் என்னும் நோக்கில் அவர்களுக்கு ஆங்கில வினைகள் மூலம் தமிழ் வினைகளையும் அவற்றின் சூழல்களையும் அறிந்துகொள்வதற்கான வாய்ப்பு இவ்விணையப்பக்கம்.

2. கணினி வழி தமிழ் இலக்கிய ஆய்வு

தமிழ் இலக்கியத் தரவுகள் சங்க காலந்தொட்டு இக்காலம் வரையில் மின்வழியில் இருக்கும் இக்காலக்கட்டத்தில் அத்தரவுகளை முறையான தரவுத் தளத்தில் சேமித்து மிகவும் நுணுக்கமான வகையில் தேடும் சாதனங்களைப் பயன்படுத்தி அலச முற்படுவது என்பது இன்றியமையாத ஒன்றாகும். இம்முயற்சியில் பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத்தில் கீழ்க்காணும் இரு இணையப் பக்கங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.[6]

6. இத்தளங்களில் கொடுக்கப்பட்டுள்ள தரவுகள் இணையத்தில் இலவசமாகக் கொடுக்கப்பட்டுள்ள மதுரைத் திட்டம், தேவாரம்.org, https://www.tamilvu.org/ ஆகிய தளங்களிலிருந்து பெறப்பட்டன. இத்தளங்களில் பயன்படுத்தப்படும் தேடுபொறி பி.எச்.பி நிரலி வழியாகவும் vue.js தொழிற்நுட்பம் வழியாகவும் கட்டுரையாளரால் உருவாக்கப்பட்டது. தரவுகள் MySQL தரவுத்தளத்தில் tamilnlp.com என்னும் தளத்தில் சேமிக்கப்பட்டுள்ளது.

sangam.tamilnlp.com

http://sangam.tamilnlp.com/mp/json/

இவ்விரு தளங்களின் முக்கிய நோக்கம் தமிழ் இலக்கியங்களிலிருந்து பாடல் வரிகளையும், சொற்களையும் சங்கம் முதல் இக்காலம் வரையிலான மொழி வரலாற்றின் அடிப்படையில் தேடும் வழியாகும். இத்தேடுபொறிகள் வழியாகப் பல சொற்கள் மற்றும் தொடர்களை அவற்றின் பயன்பாடு மற்றும் பொருள் அடிப்படையில் ஆய்வுசெய்ய வழிவகை செய்யலாம். எடுத்துக்காட்டாக 'முகில்' என்னும் சொல்லைத் தேடும்போது இச்சொல் பக்திகாலத்தில் அதிகமாகப் பயன்பாட்டில் இருப்பதையும் சங்ககாலத்தில் ஓரிரு இடங்களிலுமே வருவதைக் காணலாம். இச்செய்தியினின்று புலப்படும் ஆய்வு உண்மை என்னவெனில் பக்திக்கும் இச்சொல்லுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை உணரலாம். சங்க இலக்கியங்களில் குறிப்பாக சூளாமணி, பரிபாடல் மற்றும் மணிமேகலை போன்ற பக்தி சார்ந்த இலக்கியங்களிலேயே

காணப்படுகிறது. பதிற்றுப்பத்து, முல்லைப்பாட்டு ஆகிய இலக்கியங்களில் ஒரு சில இடங்களிலேயே இச்சொல் வருகிறது. இது போன்ற ஆய்வு உண்மைகளை இத்தேடுபொறிகள் மூலம் எளிதாக அறியமுடியும். மேலும் பார்க்கல் ஆகும், சொல்லல் ஆகும் போன்ற அமைப்புகளையும் பார்க்கல் ஆமே, சொல்லல் ஆமே என்னும் அமைப்புகளையும் இத்தரவினின்று பார்க்கும்போது 'பார்க்கலாமே', 'சொல்லலாமே' என மருவி இடைக்காலத்தில் பயன்பாட்டில் வந்துள்ளது. இதையே மேலைநாட்டு மொழியியல் அறிஞர்கள் 'பார்க்க லாம்', 'சொல்ல லாம்' எனப் பிரித்து இலக்கணம் எழுதிவிட்டனர். 'பார்க்கல்', 'சொல்லல்' போன்ற அமைப்பு இக்காலத்தமிழில் மறைந்ததன் காரணம் இதுவே. இத்தகைய மிகவும் நுணுக்கமான தமிழ் வரலாற்றின் உண்மைகளை இத்தகைய தரவுகள் வழியே அறிய ஏதுவாகும். (இது குறித்த விரிவான விளக்கங்களுக்குக் காண்க அரங்கநாதன் 2023, 2020).

இவ்வகை ஆய்வு மேன்மேலும் வளம்பெற தமிழ்த் தரவுகள் அனைத்தையும் ஒரு தரவுத்தளத்தின் கீழ் கொண்டுவந்து செறிவான தேடுபொறிகளைக் கொண்டு பல கோணங்களில் தரவை அலச அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். அதோடன்றி இத்தரவுத் தளங்கள் வழி செய்த ஆய்வை கட்டுரைகள் வழியாக மற்ற ஆய்வாளர்களுக்கு அறியப்படுத்த வேண்டும். இத்தகைய முயற்சிகள் தமிழ் இணையக் கல்விக்கழகம் (https://www.tamilvu.org/), செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் (https://cict.in/cictinneww/) ஆகியனவற்றிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பது உண்மை.

3. தமிழ் பேசும் இயந்திரத்தை நம்மால் உருவாக்க முடியுமா? நமக்கிருக்கும் சவால்கள்.

தொழிற்நுட்பமும் செயற்கை நுண்ணறிவுத் திறனும் பலவித்திலும் வளர்ந்துவிட்ட இக்காலக்கட்டத்தில் தமிழ் தொழிற்நுட்பம் பற்றிய ஆய்வு பற்றி நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய தருணத்தில் இருக்கிறோம். மனித இயந்திரத்தை உருவாக்கும் முயற்சியில் நாம் ஈடுபடும் தருணம் இது. தமிழ் பேசும் மனித இயந்திரம் மற்றும் தமிழில் நம்மோடு உரையாடும் இயந்திரம் என்பதுவே நமது குறிக்கோள். இம்முயற்சியில் இப்பகுதி இது குறித்தான ஆய்வில் ஈடுபடுகிறது. இப்பகுதியின் வழி ஒரு தமிழ் பேசும் இயந்திரத்தை இங்கு அறிமுகப்படுத்தவும் முயற்சிக்கிறோம். இப்பகுதி இயந்திரமும் தமிழும் என்னும் ஆய்வின் கட்டுரையாளரின் பல ஆண்டு முயற்சியில் உருவாக்கப்பட்டது. இது குறித்த ஆய்வின் முயற்சியை http://robot.tamilnlp.com என்ற முகவரியின் வழி நீங்கள் அறியலாம்.

இங்கு கொடுக்கப்பட்டுள்ள இணைப்புகளின் வழி இந்த இயந்திரம் பல செயல்பாடுகளை அறியலாம். அறிமுகம் குறித்த உரையாடல், ஆத்திசூடி பாடல்வரிகள், புறநானூறு வரிகள், தமிழ் மாதங்கள், போன்றவற்றை இந்த இயந்திரம் நம்மோடு இணைந்து செயல்படுகிறது. இதற்கான முக்கியக் கருவிகள் பேச்சுணரி மற்றும் உரையிலிருந்து பேச்சை மாற்றும் செயற்பாடுகள். இப்பகுதியில் தமிழ் தொழிற்நுட்பத்துக்கான ஆய்வுகள் மற்றும் செயற்திட்டங்கள் பற்றி விளக்க முற்படுவோம். தமிழ்க் கணினி ஆய்வை அடுத்தக் கட்டத்துக்கு நாம் எடுத்துச் செல்ல வேண்டும் என்பதுவே நமது முயற்சி. இவ்வாய்வு குறித்த விளக்கங்களை http://uttamam.org/papers/21_32.pdf என்னும் கட்டுரையில் விரிவாக அறியலாம்.

3.1. செயற்கை நுண்ணறிவுத் தொழிற்நுட்பம்:

செயற்கைத் தமிழ்த் தொழிற்நுட்பம் என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டிய தருணம் இது. இயந்திரம் நம்முடைய அறிவுத்திறனைப் பெறும் வழிவகைகள் பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டும். நாம் எப்படி இயந்திரத்துக்கு நம் அறிவுத்திறனைத் தமிழ் வழி கொடுக்கப் போகிறோம் என்பதுவே நமக்கு இருக்கும் சவால். நம்மால் இது இயலுமா? நாம் நம்முடைய அறிவுத் திறன் பற்றி நன்கு அறிவோமா? இக்கேள்விகளுக்கு நம்மால் சரியாக விடை கூறமுடியாதுதான். இருப்பினும் ஒரு இயந்திரத்தை உருவாக்குவோமே. இவ்வியந்திரம் எப்படியெல்லாம் நம்மோடு உரையாடுகிறது என்று பார்ப்போம். இது ஒரு முன்முயற்சி. இம்முயற்சி வெற்றியடைந்தால்

நாமும் இயந்திரமும் ஒன்றாக வாழும் ஒரு சூழல் வர வாய்ப்பிருக்கிறது எனலாம்.

3.2. நமது முயற்சி:

இந்த இயந்திரத்தைப் பற்றிய விளக்கங்களை இங்கு விளக்குவோம். இது ராஸ்பெரி பை என்னும் ஒரு பட்டைக் கணினி (single board computer) வழி உருவாக்கப்பட்ட ஒன்று. இவ்வியந்திரத்தில் லினக்ஸ் என்னும் நிரலியின் வழிப் பல முயற்சிகளைச் செய்யும் வழி வடிவமைத்திருக்கப்பட்டிருக்கிறது. முக்கியமாக பைத்தான், பிஹெச்பி, மற்றும் மைசீக்குசவல் ஆகியவற்றின் திறனை முழுதுமாகப் பயன்படுத்தும் ஆய்வுத்திறன் என்று கூறலாம். இதோடு பேச்சைக் கேட்டு அதைக் கூகுள் பேச்சு உணரி மூலம் தமிழ் உரையாக ஆக்கும் முறையும் உரையிலிருந்து பேச்சுக்கு மாற்றும் முறையும் பைத்தான் நிரலி வழியாக செயல்படுத்தப்படுகிறது.

3.3. தமிழ் பேசும் நமது தமிழ்க் கருவி:

இக்கருவி நம்மோடு உரையாடுகிறது. இதற்குக் காரணம் கூகுல் வழிவகுத்த மொழியுணர் சாதனம் மற்றும் எழுத்திலிருந்து ஒலி, ஒலியிலிருந்து எழுத்து என்னும் பலவகை ஆய்வு நுட்பங்களை இங்கு உள்ளடக்கியிருக்கிறோம். இத்தகைய ஆய்வுமுயற்சிளோடு விக்கிப்பீடியாவிலிருந்தும் இலக்கியத் தரவுகளிலிருந்தும் செய்திகளைக் கொணரும் வழிமுறையையும் இக்கருவி ஒன்றுபட பயன்படுத்துகிறது. முக்கியமாகத் தமிழ்வழி இம்முயற்சி என்பதுவே இக்குறிக்கோள்.

3.4. இக்கருவியுடன் எப்படி நாம் உரையாடப் போகிறோம்?

இக்கருவி உங்களுடைய பேச்சைக் கவனமாகக் கேட்கப் போகிறது. நீங்கள் சொல்லும் வாக்கியங்களை நன்கு புரிந்துகொள்ளப் போகிறது. நீங்கள் சொன்னதைத் திருப்பிச் சொல்லப் போகிறது. எப்படி இது நடக்கிறது? இதுவே கூகிலின் இயந்திர ஆய்வின் வெற்றி எனலாம். பேச்சைப் புரிந்துகொள்ளும் அவர்களது நிரலி. அத்தகைய நிரலிகளை நமது நிரலியில் நாம் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறோம்.

3.5. விக்கித் தரவோடு தொடர்பு:

விக்கிப்பீடியா தமிழ்த் தரவோடு இணைக்கப்பட்டுப் பின்வரும் கேள்விகள் போன்ற பல கேள்விகளுக்கு இவ்வியந்திரம் நமக்கு விவரங்கள் தரும்.

நாம் கேட்பது: மயிலாடுதுறை பற்றி சொல்லுங்க:

இந்த இயந்திரம் சொல்வது: மயிலாடுதுறை (Mayiladuthurai) (முன்பு மாயவரம் என்று அழைக்கப்பட்டது) இந்தியாவில், தமிழ்நாடு மாநிலத்தில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள நிர்வாகத் தலைமையிடமும், சிறப்பு நிலை நகராட்சியும் ஆகும். மயில்கள் ஆடும் துறை என்பதால் மயிலாடுதுறை என அழைக்கப்படுகிறது.

3.6. கூகுள் மொழிபெயர்ப்பு நிரலியோடு தொடர்புபடுத்துவோம்

மின்வழி கூகுள் மொழிபெயர்ப்பு நிரலியோடு இணைக்கப்பட்டு இவ்வியந்திரம் பின்வருமாறு நம்மோடு உரையாடுகிறது.

ஹிந்தில சொல்லுங்க

हिंदी में कहें
hindee mein kahen

நீங்களும் உங்க தம்பியும் நாளைக்கு என்னோட வீட்டுக்கு சாப்பிட வரீங்களா

क्या तुम और तुम्हारा भाई कल
रात के खाने के लिए मेरे घर
आओगे?
kya tum aur tumhaara bhaee
kal raat ke khaane ke lie
mere ghar aaoge?

தமிழ் நல்லா பேச வருமா

क्या आप अच्छी तमिल बोल सकते
हैं?
kya aap achchhee tamil bol
sakate hain?

நீங்க எல்லாரும் இந்தியாவுல எந்தெந்த இடத்துக்கு போய் இருக்கீங்கன்னு ஒன்னு விடாம சொல்றீங்களா

क्या आप मुझे बता सकते हैं कि
आप सभी भारत में कहां गये हैं?
kya aap mujhe bata sakate
hain ki aap sabhee bhaarat
mein kahaan gaye hain?

கனடால சொல்லுங்க

ಕೆನಡಿಯನ್ ಎಂದು ಹೇಳಿ
Kenaḍiyan endu hēḷi

நீங்க நாளைக்கு என்னோட வீட்டுக்கு வரீங்களா

ನಾಳೆ ನನ್ನ ಮನೆಗೆ ಬರುತ್ತೀಯಾ?
Nāḷe nanna manege
baruttīyā?

நீங்க காலையில சாப்பாடு சாப்பிட்டீங்களா

ನೀವು ಬೆಳಿಗ್ಗೆ ತಿಂದಿದ್ದೀರಾ?

Nīvu beḷigge tindiddīrā?

கூகுள் மொழிபெயர்ப்பு வசதிப் பக்கத்தில் கொடுக்கப்பட்ட அனைத்து உலக மொழிகளையும் இந்திய மொழிகளையும் தமிழ் வழி மொழிபெயர்த்து அறியும் விதத்தில் இவ்வியந்திரம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

3.7. லினக்ஸ் சாதனத்தின் மணி, நாட்கள், மாதம் போன்ற வசதிகளைப் பயன்படுத்துவோம்.

லினக்ஸ் சாதனத்தில் உள்ள நேரம், காலம் ஆகிய வசதிகளைப் பயன்படுத்தி பின்வருமாறு இக்கருவி நம்மோடு உரையாடுகிறது.

நாம் கேட்பது: இப்ப மணி என்ன

இவ்வியந்திரம் சொல்வது: இப்பொழுது அமெரிக்கக் கிழக்கு நேரம் மாலை எட்டு மணி ஒன்பது நிமிடம் ஐம்பத்து ஒன்று வினாடி

நாம் கேட்பது: இன்னைக்கு என்ன தேதி

இவ்வியந்திரம் சொல்வது: இன்றைக்கு இரண்டாயிரத்து இருபத்து மூன்றாம் வருடம் பத்தாம் மாதம் பதின் ஒன்றாம் நாள்

எண்களைத் தமிழில் மாற்றி அவற்றைப் பேச்சில் மாற்றுவதற்குக் கட்டுரையாளரால் பைத்தானில் உருவாக்கப்பட்ட தமிழ் எண்களை மாற்றும் http://robot.tamilnlp.com/py/convert_tamil_number.py என்ற நிரலி இவ்வியந்திரத்தில் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாய்வு குறித்த மேலதிக விவரங்களுக்கு காண்க Renganathan 2023a.

4. தமிழ்க் கணினி ஆய்வின் எதிர்காலம்

இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளபடி முக்கியமாக மூன்று துறைகளில் கணினியைப் பயன்படுத்துவது குறித்து நம் கவனத்தைச் செலுத்த வேண்டும். உலகலாவியத் தமிழர்களின் குழந்தைகளை மனதில் கொண்டு அவர்களுக்குத் தமிழ் கற்பிக்க http://learn.tamilnlp.com, https://www.tamilvu.org/ta/

கல்வி – விவரங்கள் – மழலைக்கல்வி போன்ற முயற்சிகள் தொடர வேண்டும். குறிப்பாக இம்முயற்சிகளைத் தொடர்ந்து பயன்பாட்டாளர்களின் பயன்பாடு வழி மதிப்பீடு செய்து இவற்றின் தரத்தைத் தொடர்ந்து வளப்படுத்த வேண்டும். இரண்டாவதாகத் தமிழ் இலக்கிய ஆய்வுக்கான sangam.tamilnlp.com, http://sangam.tamilnlp.com/mp/json/, http://tamilconcordance.in/ போன்ற இன்னும் பல தரவுத்தளங்களின் வளத்தைத் தொடர்ந்து செறிவுபடுத்த வேண்டும். குறிப்பாக தேடுபொறி வழி செய்யப்படும் ஆய்வுகளைக் கட்டுரையாகவும் நூலாகவும் வெளியிட்டுத் தமிழ் இலக்கிய ஆய்வாளர்கள் பலரை இவ்வாய்வில் ஈடுபடுத்த வேண்டும். மூன்றாவதாக robot.tamilnlp.com போன்ற தளங்களில் முயற்சி செய்யப்பட்டுள்ள கணினி நுண்ணறிவு ஆய்வுகள் வளப்படுத்த வேண்டும். https://bard.google.com/, https://chat.openai.com/auth/login போன்ற தளங்களின் வழித் தமிழுக்குக் கிடைக்கும் வளங்களின் அடிப்படையில் நமது தமிழ்க் கணினி ஆய்வுகளைத் தொடர்ந்து வழிநடத்த வேண்டும்.

துணை நூல்கள்

- Kawamura, Hiroaki. 2007. Participant Observation for Language Learners: A Performance-Based Approach to Language Learning during Study Abroad. Japanese Language and Literature. Vol. 41. No. 2. Oct. 2007.
- Miller, Cleve, 2008. Performance-based learning for teaching one-to-one classes (http://peo.cambridge.org/index.php?option=com_content&view=section&layout=blog&id=2&Itemid=8_)
- அரங்கநாதன், வாசு. 2023. தமிழ் மொழியின் வரலாற்றுப் பயணம்: சங்கம் முதல் இக்காலம் வரை காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில். (History of development of the Tamil language: From Sangam to modern period – in Tamil)
- Renganathan, Vasu 2023a. "Large Language Models (LLM) and the Role of the linguists in the World of AI" In The proceedings of the conference on செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைத் தமிழ்மொழியுடன் செயல்படுத்துவதற்கான பன்னாட்டுக் கருத்தரங்கம், குமரகுரு கல்லூரி, கோயம்புத்தூர், October 13-14, 2023. (http://uttamam.org/papers/tic2023.pdf).
- Renganathan, Vasu 2020. 'Sangam to Modern Tamil Genre: The process of grammaticalization and evolution of Modern Tamil Noun and Verb forms.' IJDL:Vol. 49, No. 1 January 2020
- Renganathan, Vasu (2016). Computational Approaches to Tamil Linguistics, Cre-A. Chennai, India.
- Renganathan, Vasu (2016). Computational Approaches to Tamil Linguistics: Scopes and Prospects. In the proceedings of the 15th Tamil Internet Conference, Gandhigram Rural University, Dindigul, Tamil Nadu. (http://www.uttamam.org/papers/16_02.pdf).
- Renganathan, Vasu (2014). Computational Phonology and the Development of Text-to-Speech

Application for Tamil. In the Proceedings of the International conference on Tamil Internet, 2014, Pondicherry, India. (http://www.uttamam.org/papers/14_35.pdf).

- Renganathan, Vasu 2011. The Tamil Language in Context: A Comprehensive Approach to Tamil Learning. Department of South Asia Studies, University of Pennsylvania.
- Renganathan, Vasu 2009. Enhancing the processes of Learning Tamil with Synchronized Media, Paper presented at the 8th International Tamil Internet Conference, Cologne, Germany. (http://www.infitt.org/ti2009/papers/vasu_renganathan_final.pdf)
- Renganathan, Vasu (2001). Development of Morphological Tagger for Tamil, In the Proceedings of the International Conference on Tamil Internet 2001, Kuala Lumpur, Malaysia.
- Renganathan, Vasu 1998. Formalizing the Knowledge of Heritage Language Learners: A Technology-Based Approach. Journal of the South Asia Language Pedagogy and Technology (http://salpat.uchicago.edu/index.php/salpat).

Concept Index: From Literary Study to Cultural Study

Dr. R. Jeyaraman

ABSTRACT

Concept index is a systematic collection of the all notions of a linguistic society. External objects including humans, relations between them and incidents and also thoughts, values, feelings, contexts of human being should be recorded in verbal form systematically in the concept index. Methods of language usage to be included in the index. This index includes both form of meaning and method of expression of meaning. It includes forming of the meaning and history of the meaning. Historically contemporary meaning of the words and modern meaning of the words both shall be analysed. Cultural meaning should be deconstructed and included in this index. Traditional meaning should be analysed through the knowledge of natural science and social science. Written language and spoken language are two different types. In spoken language sound, feelings of the speaker, context of the speech may have additional or negative meaning. These are supra segmental meanings or intonation meanings. Meaning is always beyond words. Extra meaning is between language and user of the language. Without the conscious knowledge of the speaker and writer meaning can be expressed regarding their gender, power, society, attitude and status. This meaning should be verbalized. Language has more meaning than words.

R. Jeyaraman
Thiruvalluvar University, Vellore.
jrjeyaramantvu@gmail.com

After parsing meaningful language categories can be available. Language categories can be classified and explained in grammar and lexicography. Noun meaning index is prepared based on word index for Sangam Literature and Thirukkural in Tamil. Dictionaries for all Sangam literatures with grammatical explanation are published by University of Kerala. The dictionaries were prepared based on noun and verb categories, did not considered the other categories like case, clitics, tense marker and PNG markers. Nonverbal categories are also more important in making meaning process. These categories are more associated with human mind and feelings. In literature and speech context meaning of the language is limited and pragmatic meaning and cultural meaning are unlimited. Pragmatic meaning and cultural meaning should be included in the concept index. Dictionaries, Meaning indexes and Encyclopaedia cannot cover the micro level important meanings. Meaning of the body language is also unique to include in the concept index.

A couplet in Thirukkural is taken for example to analyse for preparing concept index.

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு (குறள். 127)

யா–கா–வ்–ஆ–ஆர் ஆ–ய்–இன்–உம் நா–கா–க்–க
கா–வ்–ஆ–க்–கால்
சோ–கா–ப்ப்–அர் சொல்ல்–இழுக்கு–ப் படு–உ

Parsing of the grammatical categories in the kural are given above. Two sentences are in the kural, couplet. Translation of the couplet is: “Whatever else you may control, control your tongue, lest you should repent your indiscreet words” (V. R. Ramahandra Dikkshitar 2000: 27). Sentence 1: Anyone may not control anything, but control speech behaviour. Sentence 2: If any one cannot control speech behaviour, he/she have to get blame of the people and to save the embracement situation. Link morph, increment, release vowels are important to describe structure of the language. Structure of the language is also concept.

Nouns – நா Tongue, சோ, சொல் word, இழுக்கு, யா interrogative pronoun

Verbs – கா control, protect, prevent (4), ஆ to become, படு auxiliary verb

This kural has cause and effect meanings. Cause is a previous event. Effect is a continuous event. Time is related in the cause and effect. Both meaning can be included in the concept index. Kaa is an intransitive verb. All nouns followed by accusative case marker and intransitive verb kaa should be collected and classified. Disease control, fort control, birth control, price control and other type of control to be collected and classified. These meanings can be included in the concept index. Prevent, protect, save like these verbs overlapped with control. Overlapping meanings can be analysed and included in the concept index. Controlling tongue has two meanings: 1. food control, 2. speech control. Kural says speech control in this context. All grammatical meaning are important for concept index. All types of noun followed by various case markers should be collected and classified. On the basis of cases the meanings of nouns to be explained in the concept index. bow, spear, vessel are instrumental meaning in the lexical category. The third case in Tamil has source, through, instrument and agent meanings. Finger, cloth, eye, book, brick can be instrument in sentences. These meanings are derived from grammatical categories. Accusative case, sociative case, ablative case, locative case and other such cases can determine the meaning of the nouns. Tense marker can determine the meaning of the action or verb and the agent of the action. A character may use future tense marker than other markers. Another character may use optative form of verbs than other verbs. Some characters may use polite form of words in their speech. Few characters may use negative verbs. In ethical literature more negative verbs are used by poets for valid reasons. These differences can help to identify the behaviour and concept of the characters. Tamil is an agglutinative language. Every bound morpheme has unique meaning.

Lexical meaning, cultural meaning and grammatical meanings are important to concept index. Two poems are taken to explain for preparing concept index.

சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டு உளனோ என வினவுதி; என்மகன்
யாண்டு உளன் ஆயினும் அறியேன்; ஓரும்
புலி சேர்ந்து போகிய கல்அளை போல
தோன்றுவன் மாதோ, போர்க் களத்தானே.
(புறநானூறு. 86)

You grasp a fine pillar in my small house
You ask me “where is your son?”
I do not know where he is.
Like a mountain cave that a tiger
In-habited and abandoned,
is this womb which gave birth to him.
He will appear on the battle field. – (vaidheki)

அண்ணாந்து ஏந்திய வனமுலை தளரினும்,
பொன்நேர் மேனி, மணியின் தாழ்ந்த
நல்நெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்
நீத்தல் ஓம்புமதி பூக்கேழ் ஊர!
இன்கடும் கள்ளின் இழைஅணி நெடுந்தேர்க்
கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்
வெண்கோட்டு யானைப் பேஎர் கிழவோன்
பழையன் வேல் வாய்த்து அன்ன நின்
பிழையா நன்மொழி தேறிய இவட்கே. (நற்றிணை. 10)

Even when (her) beautiful breasts, looking
upwards (and) eminent, slacken
on her who has come to believe in your unfailing
good words,
like in the success of the spear of Palaiyan,
lord of Poor with white-tusked elephants,
when the Konkars were humbled by the
victorious Coolars
with jewl-adorned long chariots (and)
sweet strong toddy,
(and) if (she) ties, because of whiteness,
(her) good long tresses
which hang down without jewels on (her)
gold-like body
-beware of leaving (her), o man from village
rich in flowers.
– (Eva Wilden 2008: 79)

Literary meaning is emerging from Linguistic meaning. Word order in the sentence, selection words of the sentence may have different meaning from normal meaning. Author’s gender, social, cultural, regional and historical back-rounds have different meanings. Author’s intentions can have some other meanings. Figure of speech may have internal meanings. All meanings can be included in the concept index. Each literary genre have some specific method of meaning expressions. The above mentioned two poems from Sangam literature belong to agam and puram genres. Knowing literary tradition is essential to make concept index. A women/girl asked the neighbour women mother where about of the later’s son. The mother answered about her son warrior. This is the content of the poem (puram. 86). Feelings of the mother can be included in the concept index. Proud, confident, comparison and doubt are important to this index. Mother- son relation and citizen – king relations, war activity of the king, role of the female citizen are also important.

In the agam poem (naRRinai. 10) loyal girl friend of the heroine told some advices to the hero about

heroine's well future. She is comparing between present young love relation and old age life relation. Conduct of the hero should not be changed. He should not lose his oath. In this poem through the aesthetic point of view describes the body parts of the young heroine and in the future of old heroine. Breast, hair and skin of the lady are described in the poems. Through the description these are the aesthetic concepts of the old sangam period. These concepts are not changed still now. Possibility of the departure of the hero from heroine is alive in her girlfriend mind. Status of the women in ancient society is depicted in this poem. Feminist and post-modernism point of views this may have extended meanings. Poet's intention is to praise Palaiyan, the king. Through the simile poets include the king's war skill in the poem.

